وَلَا تَقُوْلُوْا لِمَنْ يُّقْتَلُ فِيْ سَبِيْلِ اللّٰهِ اَمْوَاتٌ ؕ بَلْ اَحْيَآءٌ وَّلٰكِنْ لَّا تَشْعُرُوْنَ ﴿۱۵۵﴾

**And say not of those who are killed in the cause of Allah that they are dead; nay, they are living; only you perceive not.**

மேலும், அல்லாஹ்வின் வழியில் கொல்லப்படுபவர்களை, இறந்தவர்கள் எனக் கூறாதீர்கள். மாறாக, அவர்கள் உயிருள்ளவர்களே. ஆனால், நீங்கள் உணர்ந்து கொள்வதில்லை. **(2:155)**

# அஹ்மதிய்யத்தின் உயிர்த்தியாகிகள்

## *(SHUHADA-E-AHMADIYYAT)*

مَنْ سَأَلَ اللّٰهَ الشَّهَادَةَ بِصِدْقٍ بَلَّغَهُ اللّٰهُ مَنَازِلَ الشُّهَدَاءِ وَإِنْ مَاتَ عَلٰى فِرَاشِهِ

**எவர் உண்மையான உள்ளத்துடன் அல்லாஹ்விடம் உயிர்த்தியாகத்தை வேண்டுகிறாரோ அல்லாஹ் அவரை ஷுஹீதுகளின் உயர்த்தரங்களை எட்ட வைத்து விடுகின்றான். அவர் தனது படுக்கையில் மரணித்திருந்தாலும் சரியே. (ஹதீஸ்)**

நவம்பர் **1, 2023** முதல் அக்டோபர் **31, 2024** வரைக்குமான

**இந்தியா மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும்**
**மஜ்லிஸ் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின்**

# ஆண்டு நிகழ்ச்சி

خوں شہیدانِ اُمت کا اے کم نظر! رائیگاں کب گیا تھا کہ اَب جائے گا

ہر شہادت ترے دیکھتے دیکھتے، پھول پھل لائے گی، پھول پھل جائے گی (کلام طاہر)

குறைமதி உடையவனே! உம்மத்தின் ஷுஹீதுகளின் இரத்தம் எப்போது வீண் போனது; இப்போது வீண் போவதற்கு!
நீ பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஒவ்வொரு உயிர்த்தியாகமும் பூக்கும், கனிதரும்

**வெளியிடுவோர்: இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா அலுவலகம்**
**காதியான் 143516, குர்தாஸ்பூர் மாவட்டம், பஞ்சாப்.**

# இந்தியா மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் மஜ்லிஸ் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் 2023 ஆம் ஆண்டின் ஆண்டு இஜ்திமாவுக்காக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழங்கிய அருளுக்குரிய தூதுச் செய்தி

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡم

نَحْمَدُہٗ وَنُصَلِّی عَلٰی رَسُوْلِہِ الْکَرِیْمِ وَعَلٰی عَبْدِہِ الْمَسِیْحِ الْمَوْعُوْدِ

خدا کے فضل اور رحم کے ساتھ

هوالناصر

(இறைவனின் அருளுடனும் கருணையுடனும்)

(அவனே உதவியாளன் ஆவான்)

அன்பிற்குரிய இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா உறுப்பினர்களுக்கு

**அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹு**

''**SHUHADA-E-AHMADIYYAT** - அஹ்மதிய்யத்தின் உயிர்த்தியாகிகள்'' எனும் தலைப்பில் இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா இவ்வாண்டு தனது ஆண்டு இஜ்திமாவை நடத்துவதற்கு நல்வாய்ப்பு பெறுகிறது என்பதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

இந்த சந்தர்ப்பத்தில், தூதுச் செய்தி அனுப்புமாறு என்னிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆக, உயிர்த்தியாகிகளுக்கு இஸ்லாத்தில் மிகப்பெரும் அந்தஸ்து உள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

'அல்லாஹ்வின் வழியில் கொல்லப்படுபவர்களை இறந்தவர்கள் எனக் கூறாதீர்கள். மாறாக, அவர்கள் உயிருள்ளவர்களே. ஆனால், நீங்கள் உணர்ந்து கொள்வதில்லை. மேலும், ஓரளவு பயத்தாலும், பசியாலும் செல்வங்கள், உயிர்கள், கனி வகைகள் ஆகியவற்றின் இழப்பாலும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். மேலும், (தூதரே!) நீர் பொறுமையாளர்களுக்கு நற்செய்தியைக் கூறுவீராக. அவர்கள், தங்களுக்குத் துன்பம் ஏற்படும் போது, (பதற்றமடைவதில்லை; மாறாக) நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; மேலும், நாம் அவனிடமே திரும்பிச் செல்பவர்கள் எனக் கூறுவர்.' **(2:155-157)**

அஹ்மதிய்யா ஜமாஅத்தில் அல்லாஹ்வின் வழியில் உயிர்த்தியாகங்கள் செய்யப்படுகின்றன. அவற்றில் எல்லாவற்றையும் விடப் பெரியதோ ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் காலத்தில் ஹஸ்ரத் சாஹிப்ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்கள் முன்வைத்த தியாகமாகும்.

அந்த சந்தர்ப்பத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்:

'நான் மர்ஹூம் மவ்லவி முஹம்மத் அப்துல் லத்தீஃப் அவர்கள் காட்டிய அந்த உறுதிப்பாட்டையும் அவர்கள் செய்த அந்த உயிர்த்தியாகத்தையும் பார்க்கும் போது, எனக்கு எனது ஜமாஅத்தைக் குறித்து நம்பிக்கை மிகவும் அதிகரித்து விடுகிறது. ஏனெனில், அந்த இறைவன் இந்த ஜமாஅத்தின் சில நபர்களுக்குப் பொருளை மட்டுமின்றி, அதையும் தாண்டி உயிரையும் இந்த வழியில் அர்ப்பணித்து செல்வதற்கான நல்வாய்ப்பு வழங்கியுள்ளான்.

சாஹிப்ஸாதா மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களின் ரூஹைக் கொண்டிருக்கக்கூடிய, ஆன்மிகத்தின் ஒரு புதிய செடியாக இருக்கக்கூடிய அத்தகைய பல மக்களை இந்த ஜமாஅத்தில் உருவாக்குவதற்கான நாட்டம் அந்த இறைவனுக்கு இருப்பதாகத் தெளிவாகத் தெரிகிறது.'

(நூல் தஸ்கிரத்துஷ் ஷஹாதத்தைன். ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 75)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு, எனக்குப் பிறகு என்ன ஆகுமோ தெரியவில்லையே என்ற கவலை இருந்தது. அன்னாருக்குப் பிறகும் அத்தகைய மக்கள் பிறந்தார்கள்; பிறந்து கொண்டும் இருக்கிறார்கள் என்று நாங்கள் சாட்சி பகர்கிறோம். அந்த மக்கள் உலகப் பேராசைகளைப் பொருட்படுத்தவில்லை. தம்முடைய உயிர்களையும் அர்ப்பணிக்கத் தயங்கவில்லை.

தன் கண்ணுக்கு முன்னால் மகன் ஷஹீது ஆவதைத் தந்தை கண்டார். தன் கண்ணுக்கு முன்னால் தந்தை ஷஹீது ஆவதை மகன் கண்டார். ஆனால், உறுதியான பாதம் ஆட்டம் காணவில்லை. பிறகு, தாமும் உயிரை அர்ப்பணித்து விட்டனர்.

மே 28, 2010 அன்று ஜுமுஆ தொழுகையின் நேரத்தில் ஜமாஅத்தின் இரண்டு பள்ளிவாசல்களில் நம்முடைய அன்பிற்குரிய அஹ்மதிகள் ஷஹீது ஆக்கப்பட்டார்கள். அப்பொழுது நான் ஒவ்வொரு வீட்டுக்கும் **Phone**

செய்த போது, குழந்தைகள், மனைவிமார்கள், சகோதரர்கள், தாய்மார்கள் மற்றும் தந்தைமார்கள் என அனைவரும் அல்லாஹ்வின் விருப்பத்தில் திருப்தியடைந்திருக்கக் கண்டேன். 'நாங்கள் அல்லாஹ்வின் விருப்பத்தில் மகிழ்ச்சியாக இருக்கிறோம்' என்ற தூதுச் செய்தி உறுதிவாய்ந்த அவர்களுடைய குரல்களில் தெளிவாகக் கேட்டது.

இந்த ஒன்றொன்று, இரண்டிரண்டு தியாகங்கள் என்ன பெரிய விஷயம். நாங்களோ எங்களுடைய அனைத்தையும், எங்கள் ரத்தத்தின் ஒவ்வொரு துளியையும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்திற்காக அர்ப்பணிக்க ஆயத்தமாக இருக்கிறோம். இது காலத்தின் இமாம் அவர்களை ஏற்றுக் கொண்டதன் காரணமாக எங்களிடம் உருவான அந்த ஈமானின் காரணமாக இருக்கிறது.

சில மாதங்களுக்கு முன்னர் ஆப்பிரிக்கா கண்டத்தின் நாடான புர்கினாஃபாஸோவில் நேசம், நன்றியுணர்வு, கலப்பற்ற தன்மை, ஈமான் மற்றும் உறுதியான நம்பிக்கை ஆகியவற்றால் நிறைந்திருந்த ஜமாஅத் மக்கள் ஒட்டுமொத்தமாகக் காட்டிய அந்த முன்மாதிரி வியக்க வைக்கக்கூடியதாகும். அதற்கு நிகர் அதுவே ஆகும்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்தை நிராகரித்து விடுங்கள்; நாங்கள் உங்களுக்கு உயிர்ப்பிச்சை போடுகிறோம் என்று அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஆனால், மலைகளைக் காட்டிலும் உறுதிவாய்ந்ததாகத் தென்படக்கூடிய, ஈமான் மற்றும் உறுதியான நம்பிக்கையால் நிறைந்திருந்த அந்த மக்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்:

உயிர் ஒருநாள் போகத்தான் போகிறது; இன்று இல்லை என்றால், நாளை. இதைக் காப்பாற்றுவதற்காக நாங்கள் எங்கள் ஈமானை விற்க முடியாது. எந்த உண்மையை நாங்கள் கண்டு விட்டோமோ அதை எங்களால் விட முடியாது.

இவ்வாறு ஒருவர் பின் மற்றவர் என தம் உயிரை அர்ப்பணித்துக் கொண்டே சென்றார்கள். அவர்களுடைய பெண்களும் குழந்தைகளும் கூட இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எவரும் எந்தக் கூச்சலும் போடவில்லை.

ஹஸ்ரத் சாஹிப்ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீத் (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பிடுகையில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்

(அலை) அவர்கள் தஸ்கிரத்துஷ் ஷஹாதத்தைன் என்ற நூலில் ஒரு கனவைப் பற்றிக் குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்:

'இறைவன் அவர்களுடைய வழித்தோன்றல்கள் பலரை உருவாக்கி விடுவான்.'' (ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 76)

ஹுஸூர் (அலை) அவர்கள் தமது கனவுக்கு இவ்வாறு பொருள் கொண்டார்கள்:

'அல்லாஹ் சாஹிப்ஸாதா சாஹிப் அவர்களின் உயிர்த்தியாகத்துக்குப் பிறகு, அவர்களுடைய வழித்தோன்றல்கள் பலரை உருவாக்கி விடுவான் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது'. இன்று ஆப்பிரிக்காவில் வாழ்பவர்கள் ஒட்டுமொத்தமாக இதற்கான முன்மாதிரியைக் காட்டினார்கள்; வழித்தோன்றல்களாக இருப்பதற்கான உரிமையை செலுத்தி விட்டார்கள் என்பதற்கு நாம் சாட்சியாக இருக்கிறோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட அதே உண்மைத்துவம் எனது ஆன்மாவில் உள்ளது. எனக்கு இறைவனுடன் இப்ராஹீம் கொண்டிருந்தது போன்ற தொடர்பு உள்ளது. என் இறைவனைத் தவிர வேறு எவரும் என் ரகசியத்தை அறிய மாட்டார். எதிரிகள் வீணாக தம்மை அழித்துக் கொள்கிறார்கள். நான் அவர்களுடைய கைகளால் பிடுங்கப்படக்கூடிய செடி அல்ல.

அவர்களுக்கு முன் சென்றவர்கள், பின் வரவிருப்பவர்கள், அவர்களில் மரணித்தவர்கள், அவர்களில் உயிருடன் இருப்பவர்கள் என அனைவரும் ஒன்று திரண்டு விட்டாலும், என்னை அழிப்பதற்காக துஆ செய்தாலும், இறைவன் அந்த அனைத்து துஆக்களையும் சாப வடிவம் தந்து அவர்களுடைய முகத்தில் எறிவான். நூற்றுக்கணக்கான அறிவாளி மக்கள் உங்களுடைய ஜமாஅத்தில் இருந்து வெளியேறி எமது ஜமாஅத்தில் இணைந்து கொள்வதைப் பாருங்கள்.''

(அர்பயீன் எண் 4. ரூஹானி கஸாயின் தொகுதி 17, பக்கம் 473)

அஹ்மதிய்யத்தின் எதிரிகள் மற்றும் அஹ்மதிய்யத்தின் பகைவர்களின் அநீதியான செயல்கள், அவர்களால் துஆக்கள் மூலமாகவோ, ஆதாரங்கள் மூலமாகவோ அஹ்மதிய்யா ஜமாஅத்தை எதிர்க்க முடியாது என்பதற்கு சான்றாகும். எந்த அரசாங்கமும் ஆற்றலும் (கையில்) உள்ளது என்ற கற்பனையில் நீங்கள் இருக்கிறீர்களோ அதைப் பயன்படுத்தியும்

கொள்ளுங்கள். இன்னும் சொல்வதாயின், பயன்படுத்தவும் செய்கிறீர்கள். இந்த எதிர்ப்புகளால் அஹ்மதிய்யத்தின் காலடிகள் நின்றுவிட்டனவா? அஹ்மதிய்யத்தோ ஒவ்வொரு திக்கும், ஒவ்வொரு திசையும் பரவிக் கொண்டே செல்கிறது. ஒவ்வோர் எதிர்ப்புக்குப் பிறகும் நற்பேறு பெற்ற இயல்புள்ளவர்கள் அஹ்மதிய்யத் எனும் உண்மை இஸ்லாத்தின் அரவணைப்பிற்குள் வந்துள்ளார்கள்.

எனவே, நாம் செய்ய வேண்டிய முயற்சி என்னவென்றால், ஜமாஅத் அளவிலான தியாகம் என்ற வகையில் நிகழ்ந்த அந்த சம்பவங்கள், எவ்வாறு முன்னரை விட அதிகம் நம்மை இறைவனின் பக்கம் ஈர்த்துள்ளனவோ அந்த உணர்வை, அந்த ஈமானிய வெப்பத்தை, அல்லாஹ்வுக்கு முன்னர் அவர்கள் மேற்கொண்ட மன்றாடுதலை, தமக்குள் தூய மாற்றம் செய்வதற்கு அவர்கள் மேற்கொண்ட அந்த முயற்சிகளை ஒருபோதும் பலவீனமாக ஆக விடக்கூடாது; ஒருபோதும் பலவீனமாக ஆக விடக்கூடாது. நம்முடைய சகோதரர்களின் தியாகங்களை ஒருபோதும் மரணித்துப் போக விடக்கூடாது. அவர்கள் தமது உயிரைத்தியாகம் செய்து நமக்கு வாழ்விற்கான புதிய வழிகளைக் காட்டிச் சென்றுள்ளார்கள்.

அல்லாஹ் உங்களுடைய இஜ்திமாவை எல்லா விதத்திலும் வெற்றிகரமானதாகவும், அருளுக்குரியதாகவும் ஆக்குவானாக! உங்களுக்கு ஈமான் மற்றும் உறுத்திப்பாட்டில் முன்னேற்றம் வழங்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்
எளியவன்
கையொப்பம் (மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத்)
**ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

## ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சிறப்பு வழிகாட்டல்கள் - நான்கு அம்ச நிகழ்ச்சிகள்

**1.** அனைத்து மர்கஸீ (தலைமையக) பள்ளிவாசல்களிலும், ஜமாஅத்தின் ஹல்கா (வட்டார) பள்ளிவாசல்களிலும் ஐந்து வேளைகளிலும் முழுமையான வருகையுடன் ஜமாஅத்தாகத் தொழுவதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்தவும். இது தொடர்பாக, வட்டார அளவிலான அனைத்து ஜமாஅத் பொறுப்பாளர்களும் கிளையமைப்புகளின் அனைத்துப் பொறுப்பாளர்களும், வட்டாரத்தில் எந்தெந்த சகோதரர்கள் தொழுகைகளில் சோம்பல் காட்டுபவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் பற்றி முழுவதுமாக ஆய்வு செய்து குறிப்பெடுக்கவும்.

பிறகு அப்படிப்பட்ட எல்லா சகோதரர்களுக்கும் வட்டார அளவிலான ஜமாஅத் பொறுப்பாளர்களும் கிளையமைப்பின் பொறுப்பாளர்களும் பொருத்தமான முறையில், தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் கவனமூட்டவும். அந்தப் பொறுப்பாளர்களின் கவனமூட்டும் முறை எந்த அளவுக்கு நல்ல வகையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் இருக்க வேண்டுமென்றால், அத்தகைய சகோதரர்கள் அனைவருக்கும் தமது பலவீனத்தைப் பற்றி உணர்வு ஏற்பட்டுவிட வேண்டும்; மேலும், அவர்கள் தம்மை சீர்திருத்திக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட சகோதர்கள் திருப்பி அந்தப் பொறுப்பாளர்களின் மீதே தவறான எண்ணம் கொள்ளும் அளவுக்கு எந்த வழிமுறையும் மேற்கொள்ளக் கூடாது.

அதற்காக எல்லாற்றிக்கும் முதலாக அனைத்து மேலிட அளவிலான, வட்டார அளவிலான ஜமாஅத் பொறுப்பாளர்களும் கிளை அமைப்புகளின் பொறுப்பாளர்களும் தமது மற்றும் தம்முடைய பிள்ளைகளின் முன்மாதிரியைக் காட்ட வேண்டும். பொறுப்பாளர்கள் அல்லது அவர்ளுடைய பிள்ளைகளே தொழுகைகளில் சோம்பல் காட்டுபவர்களாக இருந்து கொண்டு ஜமாஅத்தின் மற்ற உறுப்பினர்களுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் ஜமாஅத்தாகத் தொழுமாறு அறிவுறுத்துவது என்பது நடக்காது.

**2.** ஒவ்வொரு மர்கஸீ (தலைமையக) பள்ளிவாசலிலும் வட்டார பள்ளிவாசலிலும் ஃப்ஜர் மற்றம் அஸ்ர் தொழுகைக்குப் பிறகு திருக்குர்ஆன் தர்ஸ், ஹதீஸ் தர்ஸ் வழங்குவதற்கான ஏற்பாடு தொடர்ச்சியாக இருக்க வேண்டும். அந்த சந்தர்ப்பத்திலும் அதிகமான சகோதரர்கள் வருகை

தருவதற்கும் வட்டார அளவில் உள்ள ஜமாஅத், கிளை அமைப்புகளின் அனைத்து நிர்வாகமும் முயற்சி செய்ய வேண்டும்.

**3.** காலத்தின் கலீஃபா அவர்களின் ஜுமுஆ பேருரை, அவ்வாறே, இரு பெருநாள் பேருரைகள், பல்வேறு நாடுகளில் நடக்கும் மாநாடுகள், கிளை அமைப்புகளின் இஜ்திமாக்கள் ஆகிய சந்தர்ப்பங்களில் ஆற்றப்படும் சொற்பொழிவுகளை ஜமாஅத் சகோதரர்கள் ஒன்றாக அமர்ந்து கேட்பதற்கும் பார்ப்பதற்கும் ஜமாஅத் ஏற்பாட்டாளர்கள் சார்பாகத் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஏற்பாடு இருக்க வேண்டும்.

இதற்காகவும் எல்லாவற்றிற்கும் முதலாக அனைத்து தலைமையக, ஜமாஅத் அளவிலான மற்றும் கிளை அமைப்புகளின் பொறுப்பாளர்களும் தமது பிள்ளைகளுடன் இந்த சந்தர்ப்பங்களில் வந்து தமது முன்மாதிரியைக் காட்ட வேண்டும். அதற்குப் பிறகு ஜமாஅத்தின் மற்ற சகோதரர்களுக்கு அதை வலியுறுத்த வேண்டும்.

**4.** இந்திய ஜமாஅத் சகோதரர்களின் தர்பிய்யத்திற்காக ஜமாஅத் பத்திரிகையான பத்ர் வாரப் பத்திரிகையின் பதிப்புகள் உருது மட்டுமின்றி ஹிந்தி மற்றும் பிற மாநில மொழிகளிலும் துவங்கப்பட்டுள்ளன. இந்த அனைத்துப் பதிப்புகளிலிருந்து ஜமாஅத் சகோதர்கள் எந்த அளவுக்குப் பயன் பெறுகிறார்கள் என்பதைப் பற்றியும் ஆய்வு செய்ய வேண்டும். மேலும் ஒவ்வொரு வீட்டிலும் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஜமாஅத் பத்திரிகையின் ஒரு பிரதி கண்டிப்பாக செல்ல வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களை ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இந்தியாவின் ஜமாஅத் மக்களின் தர்பிய்யத்துக்காக எடுத்துரைத்துள்ளார்கள்.

கண்ணியத்திற்குரிய காயித்மார்கள் அனைவரும், (ஹல்கா) ஸயீம்மார்களும் அத்ஃபால் செயலர்களும் இதர பொறுப்பாளர்களும் இந்த வழிகாட்டல்களை ஆண்டு முழுவதும் செயல்படுத்தவும். அனைத்து குத்தாம் மற்றும் அத்ஃபாலை இந்த வழிகாட்டல்களைக் கடைபிடிக்கக்கூடியவர்களாக ஆகச் செய்யவும்.

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

# காயித்மார்கள் சிறப்பு கவனம் செலுத்தவும்

ஒவ்வோர் ஆண்டைப் போன்று இவ்வாண்டும் இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவுக்குத் தனது **2023 - 2024** ஆம் ஆண்டிற்கான (நவம்பர் **1, 2023** முதல் அக்டோபர் **31, 2024** வரைக்குமான) ஆண்டு நிகழ்ச்சியை வடிவமைத்து சமர்ப்பிப்பதற்கு நல்வாய்ப்பு கிடைக்கிறது.

மஜ்லிஸ் குத்தமுல் அஹ்மதிய்யாவின் பணிகளின் விவரமும் வழிமுறைகளும் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவுக்கான லாயிஹா அமலில் (செயல் திட்டத்தில்) அடிப்படையாக இருக்கின்றன. ஒவ்வொரு பொறுப்பாளரும் லாயிஹா அமலை (செயல் திட்டத்தைக்) கண்டிப்பாகப் படிக்க வேண்டும். மஜ்லிஸுகளின் வசதிக்காகவும் மஜ்லிஸுகளின் பணிகளை ஒரே விதமாக ஆக்குவதற்காக, ஒன்றுபட வைப்பதற்காகக் கடந்த பல ஆண்டுகளாக ஆண்டு நிகழ்ச்சிகள் வடிவில் மஜ்லிஸுகளின் பணிகளுக்கான அட்டவணை தயாரிக்கப்படுகிறது. ஒவ்வொரு பணிக்காகவும் தேதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. இவ்வாறு இந்தியாவின் அனைத்து மஜ்லிஸுகளும் நிர்ணயிக்கப்பட்ட தேதியில் நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்தக்கூடும்.

ஆனால், இப்போதும் சில மஜ்லிஸுகள் முழுமையான முறையில் ஆண்டு நிகழ்ச்சிகளைக் கடைபிடிப்பதில்லை என்பது காணப்படுகிறது. மஜ்லிஸுகள் இந்த ‘ஆண்டு நிகழ்ச்சியைக்’ கடைபிடித்தால், அவர்களின் பணிகளில் இயல்புக்கு அப்பாற்பட்ட முன்னேற்றமும் வேகமும் ஏற்பட முடியும். ஜமாஅத் சகோதரர்களின் ஓர் அடிப்படையான தனிச்சிறப்பு என்னவென்றால், அவர்கள் ஒன்றிணைந்து பணியாற்றுகிறார்கள். தமது உயர்நிலையைக் காட்டுகிறார்கள். அல்லாஹ்வின் அருளால் நாம் அனைவரும் ஓர் அமைப்பில் கோர்க்கப்பட்டிருக்கிறோம். குத்தாமுல் அஹ்மதிய்யாவின் கொடியின் கீழ் தொண்டுகள் ஆற்றுகிறோம். எனவே, நாம் தலைமையக லாயிஹா அமலையும் (செயல் திட்டத்தையும்) நிகழ்ச்சியையும் செயல்படுத்த வேண்டிய, அதற்குக் கட்டுப்பட வேண்டிய தேவையுள்ளது.

இந்த நிகழ்ச்சியின் துவக்கத்தில் சய்யிதுனா ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களால் இந்திய ஜமாஅத் மக்களின் தர்பிய்யத்துக்காக எடுத்துரைக்கப்பட்ட நான்கு வழிகாட்டல்கள் பதியப்பட்டுள்ளன. எல்லா காயித்மார்களும் இந்த நான்கு வழிகாட்டல்களையும் செயல்படுத்த வைப்பது தொடர்பாக முழுமுயற்சிடன் கடினமாக உழைத்து கவனத்துடன் தொண்டாற்றியவாறு தாக்கம் ஏற்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ளவும். இந்த வழிகாட்டல்களை செயல்படுத்துவது தொடர்பாக ஒவ்வொரு மாதமும் தனி அறிக்கையை அனுப்பவும்.

அல்லாஹ்வின் அருளால் இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தேசிய செயற்குழுவுக்கு ஏப்ரல் **2021** இல் சய்யிதுனா ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுடன் மெய்நிகர் **(Virtual)** சந்திப்பிற்கான நற்பேறு கிடைத்தது. இந்த சந்திப்பில் அன்பிற்குரிய எஜமானர் அவர்கள் விவரமாக ஒவ்வொரு துறை சம்பந்தமாக வழிகாட்டல் வழங்கினார்கள். நாம் அனைரும் இதற்கு ஏற்ப அவசியம் செயல்பட வேண்டும்.

எனவே, அஹ்மதிய்யத்தின் காதிம்களே!! உயர்வான அந்தஸ்த்திலிருக்கும் நம் அன்பிற்குரிய இமாம் அவர்களின் இந்த அறிவுரைக்கு 'லெப்பைக்' என்று கூறியவாறு இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான களத்தில் ஒருவர் மற்றவரை முந்திச் செல்வதற்கு முயற்சி மேற்கொள்ளுங்கள்.

இறைவனின் படைப்பினங்களுக்காக அனுதாபத்தை வெளிப்படுத்தியவாறு அவர்கள் வரை இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை எட்ட வைப்பதில் தங்களுடைய இரவையும் பகலையும் ஒன்றாக்கி செயல்படுங்கள். இவ்வாறு நாம் மிக விரைவாக இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் கொடி உலகில் பரப்பதைக் காண முடியும். அனைத்து நிகழ்ச்சிகளையும் நாட்டின் சட்ட திட்டங்கள் மற்றும் ஜமாஅத்தின் விதிமுறைகள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்ட வண்ணம் முழு எச்சரிக்கையுடன் நடத்துங்கள்.

இவ்வாறே, ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் **2023** ஆம் ஆண்டிற்காக **'SHUHADA-E-AHMADIYYAT - அஹ்மதிய்யத்தின் உயிர்த்தியாகிகள்'** என்ற **Theme** (மையக்கருவு)க்கு ஒப்புதல் அளித்துள்ளார்கள். நாம் ஆண்டு முழுவதும் இதன் பால் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். காதிம்கள் அஹ்மதி ஷஹீதுகளின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்க வேண்டும். தமது அறிவையும் ஈமானையும் அதிகரித்துக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அல்லாஹ் தங்கள் அனைவருடனும் இருப்பானாக! சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் இந்த வழிகாட்டல்கள் படி செயல்படுதவற்கும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய தொண்டுகள் ஆற்றுவதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக! ஆமீன்!

**K.** தாரிக் அஹ்மத்
**சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா பாரத்**

# ✵ கண்ணியத்திற்குரிய காயித்மார்களுக்கான (Refresher Classes) புத்தாக்க வகுப்புகள் ✵

லாயிஹா அமலுக்கு (செயல் திட்டத்துக்கு) ஏற்ப குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஒவ்வொரு மட்டதின் பொறுப்பாளர்களுக்கும் ஆண்டில் குறைந்தது ஒருமுறை (Refresher Classes) புத்தாக்க வகுப்புகள் நடத்துவது மிகவும் அவசியமாகும். இவ்வாறு பொறுப்பாளர்களுக்குத் தமது பொறுப்புகள் மற்றும் வட்டம் குறித்து தெரிய வரும். மேலும், சிறந்த முறையில் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பணிகளை நடத்த முடியும்.

எனவே, கீழே கொடுக்கப்பட்டள்ள விவரப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள மாதங்களில் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் (Refresher Classes) புத்தாக்க வகுப்புகள் நடைபெற வேண்டும். அதற்குப் பிறகு இந்த வகுப்புகள் நடைபெற்றது தொடர்பான அறிக்கையைத் தனியாக, குத்தாமுல் அஹ்மதிய்யா அலுவலகத்திற்கு அனுப்புவதும் அவசியமாகும்.

ஒவ்வொரு மாவட்டத்தின் மஜ்லிஸுகளுடைய கண்ணியத்திற்குரிய காயித்மார்கள் மற்றும் அவர்களின் செயற்குழு உறுப்பினர்களுக்கான (Refresher Classes) புத்தாக்க வகுப்புகள் நடத்துவது மாவட்ட காயிதின் பொறுப்பாகும். சூழ்நிலைக்கு ஏற்ப (Refresher Classes) புத்தாக்க வகுப்புகள் நடத்துவதற்கான தேதி மற்றும் இடம் நிர்ணயிக்கப்படலாம். தலைமையக பிரதிநிதியை அழைப்பதற்கு அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

**தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும்**
**“மார்ச் மாதம்”**
**நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

**மாவட்டங்கள் விவரம்:**

1. **கோவை மாவட்டம்.**
2. **சென்னை மாவட்டம்.**
3. **மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டம்.**
4. **திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமாரி மாவட்டம்.**

**மொழிபெயர்ப்பாளர் குறிப்பு:** மூல நூலில் இந்தியாவின் எந்தெந்த மாவட்டங்கள் எந்தெந்த மாதங்களில் (Refresher Classes) புத்தாக்க வகுப்புகள் நடத்த வேண்டும் என்ற விவரம் பதியப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள மாதத்தின் விவரம் மட்டுமே மொழியாக்கத்தில் தரப்பட்டுள்ளது.

# ✵தஃலீம் துறையின் ஏற்பாட்டின் கீழ் நூல்கள் வாசிக்கும் திட்டம்✵

சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்களின் நூல்களை வாசிப்பதன் பால் குறிப்பாக கவனமுட்டியுள்ளார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டலை செயல்படுத்தியவாறு தஃலீம் துறை ஒவ்வோர் ஆண்டும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் கண்ணியத்திற்குரிய கலீஃபாக்கள் உடைய சில நூல்களை வாசிப்பதற்காக நிர்ணயிக்கிறது. ஒவ்வொரு காதிமும் கண்டிப்பாக அந்த நூல்களை வாசிக்க வேண்டும் என்று காதிம்களிடம் எதிர்பார்க்கிறது.

இவ்வாண்டு தஃலீம் துறை ஆண்டு முழுவதும் வாசிப்பதற்காக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்களின் 'அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் (அன்வாருல் உலூம் தொகுதி 8)' என்ற நூலைத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்த நூலை அனைவரும் ஒன்றாக இணைந்து வகுப்புகள் வடிவிலும் மற்றும் Detail Group Discussion வடிவிலும் படிக்கவும். இந்த நூலிருந்து முழுமையான முறையில் பயனடைவதை உறுதி செய்யவும். தனிப்பட்ட முறையிலும் இந்த நூல்களை வாசிக்குமாறு காதிம்களுக்கு வலியுறுத்தவும்.

வாசிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள நூலின் ஆங்கில மற்றும் ஹிந்தி மொழியாக்கங்களும் நஸாரத் நஷ்ரோ இஷாஅத் காதியானில் உள்ளன. இவ்வாறே ஜமாஅத்தின் இணையதளங்களிலும் உள்ளன.

| | |
|---|---|
| நவம்பர் 2023 | அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 113 - 134 |
| டிசம்பர் 2023 | அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 134 - 154 |
| ஜனவரி 2024 | அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 154 - 174 |
| ஃபிப்ரவரி 2024 | அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 174 - 193 |
| மார்ச் 2024 | அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 193 - 213 |
| ஏப்ரல் 2024 | அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 213 - 233 |
| மே 2024 | அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 233 - 253 |
| ஜூன் 2024 | அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 253 - 273 |
| ஜூலை 2024 | அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 273 - 293 |
| ஆகஸ்ட் 2024 | அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 293 - 313 |
| செப்டம்பர் 2024 | அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 314 - 335 |
| அக்டோபர் 2024 | அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 335 - 351 |

# ✵தீனீ நிஸாப் (மார்க்கத்) தேர்வு✵

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப ஓர் ஆண்டில் மூன்று முறை காதிம்களுக்கு தீனீ நிஸாப் (மார்க்கத்) தேர்வு நடத்தப்படுகிறது. தலைமையகம் தரப்பிலிருந்து காதிம்களின் இரண்டு பிரிவுகளுக்குமான (அதாவது, பிரிவு ஒன்று 15 முதல் 25 வயது வரை மற்றும் பிரிவு இரண்டு 26 முதல் 40 வரைக்குமான) வினாத்தாள்கள் அனுப்பி வைக்கப்படும். குத்தாமின் அனைத்துப் பொறுப்பாளர்கள் உட்பட மஜ்லிஸின் ஒவ்வொரு காதிமும் இந்தத் தேர்வில் கலந்து கொள்வது அவசியமாகும் என்பதைக் குறிப்பாக கவனத்திற்குக் கொள்ளவும். மஜ்லிஸின் அனைத்து காதிம்களையும் தற்போதிலிருந்தே (தேர்வுக்குத்) தயார் செய்ய வையுங்கள்.

மார்க்கத் தேர்வு நடத்துவதற்கான தேதிகளும் பாடத்திட்டங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. குத்தாமின் இரண்டு பிரிவுகளுக்கும் பாடத்திட்டம் ஒன்றுதான். ஆயினும், வினாத்தாள்கள் தனித்தனி தரத்தில் இருக்கும்.

| | | |
|---|---|---|
| முதல் மார்க்கத் தேர்வு | 28-01-2024 | (1) திருக்குர்ஆன்: அதிகாரம் ‘அல் அன்ஃபால்’ ருகூ 1 முதல் 10 வரை (மொத்தம் 10 ருகூவுகள்)<br>(2) நூல்: இரண்டு உயிர்த்தியாகங்கள் பற்றிய நற்குறிப்பு |
| இரண்டாவது மார்க்கத் தேர்வு | 28-04-2024 | (1) திருக்குர்ஆன்: அதிகாரம் ‘அத் தவ்பா’ ருகூ 1 முதல் 8 வரை (மொத்தம் 8 ருகூவுகள்)<br>(2) நூல்: அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் (முதல் பாதி) |
| மூன்றாவது மார்க்கத் தேர்வு | 25-08-2024 | (1) திருக்குர்ஆன்: அதிகாரம் ‘அல் அஃராஃப்’ ருகூ 17 முதல் 24 வரை (மொத்தம் 8 ருகூவுகள்)<br>(2) நூல்: அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் (இரண்டாம் பாதி) |

அத்ஃபாலுக்காக, பிரிவுகளுக்கு ஏற்ப “வக்ஃபேநவ் பாடத்திட்டம்” எனும் நூல் பாடத்திட்டமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. யாராவது ஒரு திஃப்லுக்கு உருது தெரியாது என்றால் தேர்வுக்கு முன்னதாக வினாத்தாள் மொழிபெயர்க்கப்பட்டு கொடுக்க வேண்டும் என்ற விஷயத்தையும் கருத்திற் கொள்ளவும். அனைத்துத் தேர்வுகளின் விடைத்தாள்களையும் மாவட்ட காயித்மார்களுக்கு அனுப்பவும்.

## ✵தர்பிய்யத் கூட்டங்களுக்கான தலைப்புகள்✵

தர்பிய்யத் கூட்டங்களில் கீழ்கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் சொற்பொழிவுகள் ஆற்றுவதற்கான ஏற்பாடு செய்யவும். இது போக, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நடப்பு மாதத்தில் ஆற்றிய அனைத்து ஜுமுஆ பேருரைகளிலிருந்தும் முக்கியமான கருத்துக்கள் மற்றும் குத்பா சுருக்கங்கள் ஆகியவற்றையும் தர்பிய்யத் கூட்டங்களில் விவாதிக்கவும். அப்போது தான் குத்தாமுக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பாக்களில் வழங்கப்படும் முக்கியமான வழிகாட்டல்கள் குறித்து தெரிய வரும்.

| | |
|---|---|
| நவம்பர் 2023 | அறிவியல் ரீதியாக இறையிருப்பிற்கான சான்றுகள் |
| டிசம்பர் 2023 | காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதன் முக்கியத்துவமும் அதன் அருள்களும் |
| ஜனவரி 2024 | அஹ்மதிய்யத்தின் உயிர்த்தியாகிகள் **(SHUHADA-E-AHMADIYYAT)** |
| ஃபிப்ரவரி 2024 | இளைஞர்கள் சீர்திருந்தாத வரை சமுதாயங்கள் சீர்திருந்த முடியாது |
| மார்ச் 2024 | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தப்லீஃக் செய்யும் முறை |
| ஏப்ரல் 2024 | பொருள் தியாகத்தின் முக்கியத்துவமும் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பொறுப்புகளும் |
| மே 2024 | கிலாஃபத்தின் உறுதிப்பாடும் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பொறுப்புகளும் |
| ஜூன் 2024 | வஸிய்யத் அமைப்பின் வரலாறும் தற்காலத்தில் அதன் அவசியமும் |
| ஜூலை 2024 | தற்காலத்தில் வக்ஃபேநவ் / வக்ஃபே ஸிந்தகீயின் முக்கியத்துவமும் அதன் அருள்களும் |
| ஆகஸ்ட் 2024 | (حُبُّ الْوَطَنِ مِنَ الْاِیْمَانِ) நாட்டுப் பற்று கொள்வது ஈமானின் அங்கமாகும் |
| செப்டம்பர் 2024 | திருக்குர்ஆன் அனைத்து அறிவுகளின் கருவூலமாகும் |
| அக்டோபர் 2024 | இஸ்லாமிய போதனைகள்படி மனிதனின் உடல் நலத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் |

# ✵தர்பிய்யத் முகாம்கள்✵

இந்தியாவின் மஜ்லிஸுகளில் சில மஜ்லிஸுகளைத் தேர்ந்தெடுத்து கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அங்கு மாவட்ட அளவில் 15 நாள் தர்பிய்யத் முகாம் நடத்துவது அவசியமாகும். எங்கு தங்குவது போன்றவற்றிற்குப் பொருத்தமான வசதி உள்ளதோ அப்படிப்பட்ட மஜ்லிஸுகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட மஜ்லிஸின் காயித்மார்கள் தமது மாவட்ட காயித் சாஹிப் அவர்களுடன் இணைந்து நிர்ணயிக்கப்பட்ட மாதங்களில் தர்பிய்யத் முகாம்கள் நடப்பதை உறுதி படுத்தவும். இது தொடர்பாக, மஜ்லிஸ்கள் தரப்பிலிருந்து 100 சதவீதம் அறிக்கை கிடைப்பதில்லை. இதன் பால் குறிப்பான கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது.

**தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள**
**அனைத்து மஜ்லிஸுகளுக்கும்**
**“மார்ச் மாதம்”**
**நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

**தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மஜ்லிஸுகள் விவரம்:**

1. **சென்னை மஜ்லிஸ்.**
2. **கோவை மஜ்லிஸ்.**
3. **மேலப்பாளையம் மஜ்லிஸ்.**
4. **மதுரை மஜ்லிஸ்.**

**மொழிபெயர்ப்பாளர் குறிப்பு:** மூலநூலில் இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மஜ்லிஸுகளில் எந்தெந்த மஜ்லிஸுகள் எந்தெந்த மாதங்களில் தர்பிய்யத் முகாம் நடத்த வேண்டும் என்ற விவரம் பதியப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள (நான்கு) மஜ்லிஸுகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள மாதத்தின் விவரம் மட்டுமே மொழியாக்கத்தில் தரப்பட்டுள்ளது.

# ✵பரிசுக் கட்டுரை எழுதும் போட்டி✵

தஃலீம் (கல்வித்) துறையின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா உறுப்பினர்களுக்கு அறிவுக் கட்டுரை எழுதுதவற்காக தலைப்புகள் வழங்கப்படுவதுண்டு. இவ்வாண்டு கீழ்வரும் தலைப்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

கட்டுரை எழுதுவதிலும் அதிகதிமான காதிம்களை இணைப்பதற்கு முயற்சி செய்யுமாறும், காதிம்களுக்குக் கட்டுரை எழுதுமாறு மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டே இருக்குமாறும் தங்களிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது. கட்டுரைகளின் தலைப்புகளும் விபரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**குத்தாம் பிரிவு '1' (முரப்பிகள்/முஅல்லிம்கள்/ஜாமிஆ மாணவர்களுக்கான) தலைப்பு:**

## ''இஸ்லாத்தில் ஷஹீதுகளின் அந்தஸ்தும் மேன்மையும் மற்றும் நான்காவது கிலாஃபத் வரையிலுமான அஹ்மதி ஷஹீதுகளின் விபரம்''

**குத்தாம் பிரிவு '2' (ஏனைய காதிம்களுக்கான) தலைப்பு:**

## ''இஸ்லாத்தில் ஷஹீதுகளின் அந்தஸ்தும் மேன்மையும் மற்றும் ஐந்தாவது கிலாஃபத் காலத்தின் அஹ்மதி ஷஹீதுகளின் விபரம்''

**அத்ஃபாலுக்கான தலைப்பு:**

## ''ஸாஹிப்ஸாதா ஷஹ்ஸாதா அப்துல் லத்தீஃப் ஷஹீத் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாறு''

## (அல்லது)

## ''சய்யித் தாலிஃ அஹ்மத் ஷஹீத் அவர்களின் வாழ்க்கை வரலாறு''

# ✵சிறப்புக் கட்டுரை எழுதும் போட்டி✵

இவ்வாண்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் நூல் **'**அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம்**'** தொடர்பாக ஒரு சிறப்புக் கட்டுரைப் போட்டி நடத்தப்படுகிறது. அதில் கீழ்வரும் கேள்விகளுக்கான பதில்கள் அளிக்க வேண்டும்:

**1.** **'**அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம்**'** நூலின் சுருக்கமான அறிமுகம். **(300** சொற்களில்**)**

**2.** அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தனிச்சிறப்பான விவகாரங்கள். **(500** சொற்களில்**)**

**3.** இறைவனைப் பற்றி இஸ்லாம் எடுத்துரைக்கு போதனை என்ன**? (500** சொற்களில்**)**

**4.** அடியாருக்கு இறைவனுடனான தொடர்பு எப்படி இருக்க வேண்டும்**? (500** சொற்களில்**)**

**5.** அடியார் எந்த அமல்களைக் கொண்டு அல்லாஹ்வுடனான தனது தொடர்பை வெளிப்படுத்த வேண்டும்**? (500** சொற்களில்**)**

**6.** இறைவன் அடியாருக்குக் கிடைக்க முடியுமா**? (500** சொற்களில்**)**

**7.** பண்பாடு குறித்த இஸ்லாமிய போதனை என்ன**? (500** சொற்களில்**)**

**8.** இஸ்லாமிய அரசாங்கத்தின் உரிமைகளும் அதன் கடமைகளும் எவை**? (500** சொற்களில்**)**

**9.** மறுவுலகின் தண்டனை மற்றும் நற்கூலி எங்கு எந்த வடிவில் இருக்கும்**? (200** சொற்களில்**)**

**10.** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளின் தாக்கம் யாது**? (500** சொற்களில்**)**

## இரண்டு கட்டுரைகளுக்குமான நிபந்தனைகள்:

☼ கட்டுரை குறைந்தபட்சம் **5,000** (ஐயாயிரம்) சொற்களைக் கொண்டிருக்க வேண்டும். அத்ஃபாலுக்கு **3,000** (மூவாயிரம்) சொற்களைக் கொண்டிருப்பது நிபந்தனையாகும்.

☼ கட்டுரை உருது, ஆங்கிலம் மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளில் மட்டுமல்லாமல், இந்தியாவின் எந்த மாநில மொழியிலும் எழுதப்படலாம்.

☼ கட்டுரை அழகிய கையெழுத்தில் காதித்தின் 2/3 (மூன்றில் இரண்டு) பகுதியில் எழுதப்பட்டிருக்க வேண்டும். காகிதத்தின் பின்புறம் (மறுபுறம்) எழுதக்கூடாது.

☼ கட்டுரையை **Type** செய்தும் அனுப்பலாம்.

☼ கட்டுரையில் கொடுக்கப்படும் சான்றுகள் முழுமையானவையாகவும் தகுதிச் சான்று பெற்றவையாகவும் இருக்க வேண்டும். (உதாரணமாக: நூலின் பெயர், நூலாசிரியர் பெயர், பாகம்/தொகுதி எண், பக்க எண், வெளியிடப்பட்ட ஆண்டு, வெளியிடப்பட்ட இடம் முதலியவை)

☼ கட்டுரை எழுதுபவர் கட்டுரையின் முதல் பக்கத்தில் தன் பெயர், மஜ்லின் பெயர், முழு முகவரி, தொலைபேசி எண் போன்ற அவசியமான தகவல்களை எழுத வேண்டும்.

☼ அனைத்துக் கட்டுரைகளும் மாவட்ட காயித்மார்களின் மூலமாக இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய கடைசி தேதி ஜூலை **1, 2024** ஆகும்.

☼ இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவுக்குக் கட்டுரையை வெளியிடுவதற்கான முழு உரிமை உண்டு.

## குத்தாமுக்கான ரொக்கப் பரிசு:

| | | |
|---|---|---|
| **முதல் பரிசு 3500 ரூபாய்** | **இரண்டாம் பரிசு 3000 ரூபாய்** | **மூன்றாம் பரிசு 2500 ரூபாய்** |
| **நான்காம் பரிசு 1500 ரூபாய்** | **ஐந்தாம் பரிசு 1200 ரூபாய்** | **ஆறாம் பரிசு 1000 ரூபாய்** |

## அத்ஃபாலுக்கான ரொக்கப் பரிசு:

| | | |
|---|---|---|
| **முதல் பரிசு 3000 ரூபாய்** | **இரண்டாம் பரிசு 2500 ரூபாய்** | **மூன்றாம் பரிசு 2000 ரூபாய்** |
| **நான்காம் பரிசு 1500 ரூபாய்** | **ஐந்தாம் பரிசு 1200 ரூபாய்** | **ஆறாம் பரிசு 1000 ரூபாய்** |

காயித்மார்கள் தங்கள் மஜ்லிஸுகளின் குத்தாம் மற்றும் அத்ஃபாலுக்கு அதிகதிகமாக இந்தப் பரிசுக் கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்வதன் பால் சிறப்பு கவனமூட்டவும்.

# ✵ கருத்தரங்கு (Seminar) ✵

| | | |
|---|---|---|
| முதலாவது | போதை பொருள்களால் மனித வாழ்விலும் சமூகத்திலும் ஏற்படும் பாதிப்புகள் | **14.01.2024** ஞாயிற்றுக்கிழமை |
| இரண்டாவது | இஸ்லாம் அஹ்மதிய்யத் மீது தற்காலத்தில் செய்யப்படும் ஆட்சேபனைகளும் அவற்றிற்கான பதில்களும் | **17.03.2024** ஞாயிற்றுக்கிழமை |
| மூன்றாவது | ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் திருமண பந்தம் தொடர்பாக வழங்கிய வழிகாட்டல்கள் | **19.05.2024** ஞாயிற்றுக்கிழமை |

# ✵ மருத்துவ முகாம்களுக்கான காலண்டர் ✵

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதங்களில், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவ முகாம்கள் நடத்துவது மிகவும் அவசியமாகும். முகாம்களின் தன்மையை மஜ்லிஸுகள் தமது நிலைமைகளுக்கு ஏற்ப தாமே தீர்மானிக்கலாம்.

**Eye Camp** (கண் பரிசோதனை முகாம்), **Dental Camp,** (பல் பரிசோதனை முகாம்), **Sugar Camp** (சர்க்கரை பரிசோதனை முகாம்), **Medical Checkup Camp** (பொதுவான மருத்துவ பரிசோதனை முகாம்) மற்றும் **Homoeopathy Camp** (ஹோமியோபதி முகாம்) முதலியவை....

**தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும்**
**“மே மாதம்”**
**நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

**மாவட்டங்கள் விவரம்:**

1. **மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டம்.**
2. **திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமாரி மாவட்டம்.**
3. **சென்னை மாவட்டம்.**
4. **கோவை மாவட்டம்.**

**மொழிபெயர்ப்பாளர் குறிப்பு:** மூல நூலில் இந்தியாவின் எந்தெந்த மாவட்டங்கள் எந்தெந்த மாதங்களில் மருத்துவ முகாம்கள் நடத்த வேண்டும் என்ற விவரம் பதியப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள மாதத்தின் விவரம் மட்டுமே மொழியாக்கத்தில் தரப்பட்டுள்ளது.

# ✵ தப்லீஃக் ✵

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏதேனும் ஒரு நாட்டிற்காகவோ அல்லது ஒரு சமுதாயத்திற்காகவோ அனுப்பவில்லை. மாறாக, உலகில் உள்ள அனைத்து சமுதாயங்கள், அனைத்து மார்க்கங்கள் மற்றும் அனைத்து நாடுகளின் நேர்வழிக்காக அனுப்பியுள்ளான்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

"நான் இந்த காலத்தில் இறைவன் புறமிருந்து வந்திருப்பது முஸ்லிம்களின் சீர்திருத்ததிற்காக மட்டும் அல்ல. மாறாக, முஸ்லிம்கள், இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் ஆகிய மூன்று சமுதாயங்களின் சீர்திருத்ததிற்காகவும் தோன்றியுள்ளேன். இறைவன் என்னை முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹாக அனுப்பியுள்ளது போன்றே நான் இந்துகளுக்கு அவதாரமாக உள்ளேன்.

**(நூல்: லெக்சர் சியால்கோட் - பக்கம் : 9)**

தப்லீஃக் பணி எந்தஅளவிற்கு விசாலமானதும் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகும்; மேலும், இந்தக் கடமை மற்றும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் எந்த அளவிற்கு உத்வேகத்துடனும் துரிதமாகவும் செயல்பட வேண்டிய தேவை இருக்கின்றது என்பது மேற்கூறப்பட்ட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோளிலிருந்து புலப்படுகிறது.

அல்ஹம்துலில்லாஹ்! இந்திய அஹ்மதிய்யா ஜமாஅத்தும் தப்லீஃக் எனும் இந்த முக்கியமான கடமையை நிறைவேற்றுவதற்கு முழு முயற்சியை மேற்கொள்கிறது. ஆனால், இதைப் பலவழிமுறைகள் மூலமாக தலைமையக அமைப்பின் கீழ் மேற்கொண்டு துரிதப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. அந்த வழிமுறைகளிலேயே தப்லீஃக் தினம் கொண்டாடப்படுவதும் மிகவும் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இது குறித்து கூறுகிறார்கள்:

"பொதுவாக தப்லீஃக் செய்வது ஒவ்வொரு நம்பிக்கையாளரின் கடமையாகும். ஒவ்வொரு உண்மையான நம்பிக்கையாளரும் தினமும் தப்லீஃக் செய்து கொண்டிருப்பார் என்று என்னால் உறுதியாகக் கூற முடியும். ஆனால், சில பலவீனமான இயல்பு கொண்டவர்களில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது. மேலும், யாராவது ஒருவர் வந்து தங்களுக்கு தப்லீஃக் செய்யுமாறு கூற வேண்டும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள். ஆக, யாராவது வந்து தங்களைத் தட்டி எழுப்ப வேண்டும் என்று செயல்ரீதியாக அவர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள்."

**(ஜுமுஆ பேருரை: அக்டோபர் 13, 1933)**

இவ்வாறே ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இது குறித்து கூறுகிறார்கள்:

“தலைமையக அமைப்பைப் பின்பற்றியவாறு இந்த தினத்தை அதாவது தப்லீஃக் தினத்தைக் கொண்டாட வேண்டும். அப்போதுதான் வேலை நடக்கும். இல்லை என்றால், எழுந்து சென்று யார் வாயில் என்ன வருகிறதோ கூறிவிட்டோம்; தலையில் சுமத்தப்பட்ட சுமை என்று வேலையை ஆரம்பித்து விட்டோம் என்று இருக்கக்கூடாது. பிறகு முயற்சி வீணடைந்து எதுவும் கிடைக்காமல் போகலாம்.

எனவே உங்களுடைய அறிவைப் பயன்படுத்துங்கள். இல்லை என்றால், தப்லீஃக் தினம் சில காலத்திற்குப் பிறகு முற்றிலும் வீணாகி அர்த்தமற்றதாகி இருந்துவிடும். எப்பொழுது வரை நீங்கள் வீடுகளின் கதவுகளைத் தட்டுவீர்கள்? பிறகு, இப்போது நாம் தப்லீஃக் தினம் கொண்டாடி விட்டோம் என்று அமைதியாக அமர்ந்துவிடுவீர்கள். தப்லீஃக் தினம் கொண்டாட முடிவு எடுப்பது மட்டும் போதுமானதல்ல. எவ்வாறு கொண்டாடலாம்? எவ்வாறு அதனை உயிரோட்டம் உள்ளதாக வைக்கலாம்? நாம் கண்டிப்பாகக் கொண்டாட வேண்டும் என்று ஜமாஅத்துக்குள் ஓர் அசைவு ஏற்படும் அளவு எவ்வாறு அதிலிருந்து பயனடையலாம்?

மகிழ்ச்சி இருக்க வேண்டும். நாம் கொண்டாடிய இன்ன தப்லீஃக் தினத்தினால் நமக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது; இத்தனை பேர் வந்தனர்; இவ்வாறு அவர்கள் ஆர்வம் கொண்டனர் என்று பேசப்பட வேண்டும். ஆக, இவ்வாறு வேலை நடக்க வேண்டும். சுறுசுறுப்பான உயிரோட்டமுள்ள ஜமாஅத்துகளைப் போன்று நீங்கள் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.”

**(செப்டம்பர் 9, 1992 அன்று பெல்ஜியமில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து)**

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

“எனவே இன்று உலகை அழிவின் குழிக்குள் விழுவதிலிருந்து காப்பாற்றும் பொறுப்பு முஹம்மதிய மஸீஹின் அடிமைகளுடையதாகும். உலகம் நிலைத்திருப்பது இன்று நம் கையில் உள்ளது. இறைவன் இன்று நம்மை உலகத்தின் ஆன்மீக தாகத்தைத் தணிப்பதற்காக நிர்ணயித்துள்ளான். எனவே, இந்தப் பொறுப்பைப் புரிய வேண்டிய தேவை உள்ளது. இந்தப் பணிக்காக சிறிது இலக்கியங்கள், சில கருத்தரங்குகள் அல்லது சில கூட்டங்கள் நடத்துவது மட்டும் பயனளிக்காது. மாறாக, நம்முடைய ஒவ்வொரு மட்டமும் தத்தமது வட்டத்தில் இந்தப் பணியை நிறைவேற்றுவதற்காக முன்வர வேண்டும். நிரந்தரதன்மையுடன் பணியுடன் ஒன்றிவிட வேண்டும். நமது அமல்களை இஸ்லாத்தின் உண்மையான போதனைக்கு ஏற்ப அமைத்துக் கொள்ள வேண்டும். இறைவனுக்கு முன்பு குனிந்தவாறு இறைவழிபாட்டுக்கான உரிமையை செலுத்தவேண்டும்.”

**(2015 ஆம் ஆண்டு ஜெர்மனி ஆண்டு மாநாட்டின் நிறைவுரை)**

# “தப்லீஃக் தின” நிகழ்ச்சிகள்

தப்லீஃக் தினத்தன்று கீழ் வரும் விபரங்கள்படி செயலாற்றப்படும்.

1. ஒவ்வொரு தப்லீஃக் தினத்தையும் தஹஜ்ஜுத் தொழுகையுடன் தொடங்க வேண்டும்.

2. ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு தப்லீஃக் சம்பந்தமான சிறப்பு ‘திருக்குர்ஆன் தர்ஸிற்கான’ ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. தப்லீஃக் தினம் வெற்றிபெறுவதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு கடிதம் எழுத வேண்டும்.

4. தப்லீஃக் தினத்திற்காகப் புறப்படுதவற்கு முன்பு சதக்கா கொடுக்க வேண்டும்.

5. தப்லீஃக் தினத்திற்காகப் புறப்படுதவற்கு முன்பு தப்லீஃக் பணிக்காகப் புறப்படும் அணியுடன் குறைந்தது ஒரு மணி நேரம் ஊக்கப்படுதத்தும் வகுப்பு (Motivational Class) நடத்தவும். அதில் அவர்களுக்கு இந்தப் பணியின் முக்கியத்துவம் மற்றும் குறிக்கோள்களை கண்ணியத்திற்குரிய கலீஃபாக்களின் மேற்கோள்களின் ஒளியில் புரியவைத்து தப்லீஃக் செய்தவற்கு ஊக்கப்படுத்தவும். மேலும், நாம் இந்தப் பணியை மக்களுக்கு இறைஞானம் கிடைக்கப் பெற வேண்டும் என்பதற்காகவே செய்கின்றோம் என்ற விஷயத்தை குறிப்பாகப் புரிய வைக்கவும்.

6. நமது பிரதிநிதிகள் தப்லீஃக் தினத்திற்காகப் புறப்படும் போதெல்லாம் எந்த மக்களுக்கு உண்மைத் தூதுச் செய்தியை எட்ட வைக்கின்றார்களோ அவர்களுக்கு **www.alislam.org** என்ற இணையதளம், **(Light of Islam)** எனும் நூரூல் இஸ்லாம் துறையின் **blog,** ஜமாஅத்தின் **Toll Free Number** மற்றும் **You tube** இல் இருக்கக்கூடிய நம்முடைய நிகழ்ச்சிகள் ஆகியவற்ற அறிமுகப்படுத்தி அதனுடைய **link** ஐயும் கண்டிப்பாக அவர்களுக்குக் கொடுக்கவும். யாரையெல்லாம் தொடர்பு கொள்கின்றார்களோ, முயற்சி செய்து அவர்களின் **Email id** மற்றும் **Whatsapp** எண் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளவும். இவ்வாறு **Email** மற்றும் **Whatsapp** மூலமாக தப்லீஃக் தொடர்பான விஷயங்களை அவர்களுக்குத் தொடர்ந்து அனுப்பக்கூடும்.

7. அதைப்போன்றே எவர்களை எல்லாம் சந்திக்கின்றீர்களோ அவர்களுக்கு மிகவும் அன்போடும் நுட்பமான முறையிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கண்ணியத்திற்குரிய கலீஃபாக்களின் நூல்களை அறிமுகப்படுத்தவும். மேலும், அவர்கள் இந்த நூல்களை உருது, ஆங்கிலம், ஹந்தி அல்லது தம்முடைய வட்டார மொழியில் படிப்பதற்காக அவர்களுக்கு **Alislam** இணையதளத்தின் **link** ஐயும் கொடுக்கவும்.

❖ **முதல் தப்லீஃக் தினம் (மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை)**

முதல் தப்லீஃக் தினத்தில் ஜமாஅத் உறுப்பினர்கள் அதிகதிகமாகத் தமது உறவினர்கள் மற்றும் அண்டை வீட்டுக்கார்களுக்கு தப்லீஃக் செய்யவும்.

அமைதியைப் பரப்புவதற்காக ஜமாஅத் மேற்கொள்ளும் முயற்சிகளைப் பற்றிக் கூறியவாறு ஜமாஅத்து இலக்கியங்களை அவர்களுக்குக் கொடுக்கவும்.

❖ **இரண்டாவது தப்லீஃக் தினம் (மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை)**

இந்த நாளில் நகரத்தின் அனைத்து அரசு அதிகாரிகள் (IAS அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் முதலியோர்) அரசியல் தலைவர்கள் மற்றும் மதத் தலைவர்களைச் சந்தித்து அவர்களுக்கு உண்மைத் தூதுச் செய்தியை எட்ட வைக்கவும்.

❖ **மூன்றாவது தப்லீஃக் தினம் (மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை)**

இந்த நாளில் நகரத்தின் அனைத்து நீதிபதிகள், வழக்கறிஞர்கள், இன்ஜினியர்கள், மருத்துவர்கள், CA, Architecture மற்றும் இதர துறையில் உளள்வர்களுக்கு உண்மைத் தூதுச் செய்தியை எட்ட வைக்கவும்.

❖ **நான்காவது தப்லீஃக் தினம் (மாதத்தின் நான்காவது ஞாயிற்றுக்கிழமை)**

இந்த நாளில் தங்கள் நகரத்தின் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு உண்மைத் தூதுச் செய்தியை எட்ட வைக்கவும்.

❖ **ஐந்தாவது தப்லீஃக் தினம் (மாதத்தின் ஐந்தாவது ஞாயிற்றுக்கிழமை)**

இந்த நாளில் கடந்த நான்கு தப்லீஃக் தினங்களில் எந்த நபர்கள் ஜமாஅத்தின் தூதுச் செய்தியை செவியேற்பதில் ஆர்வம் காட்டினார்களோ அவர்களுடன் விவரமாக உரையாடுவதற்காக, உள்ளூர் ஜமாஅத்து மூலமாகக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளவதற்கு, அவர்களைப் பள்ளிவாசல் அல்லது மிஷன் ஹவுஸுக்கு அழைப்பதற்கான ஏற்பாடு செய்யவும். இந்த சந்தர்ப்பத்தில் தேவைக்கேற்ப கேள்வி பதில் நிகழ்ச்சிக்கான ஏற்பாடும் செய்யப்படலாம்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் முலம் அமைதியை நிலைநாட்ட செய்யப்படுகின்ற முயற்சிகள் உள்ளடங்கிய Documentary, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பாராளுமன்றங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் ஆற்றிய பல்வேறு சொற்பொழிவுகள், ஊடகங்களுடனான உரையாடல் மற்றும் இதர கேள்வி பதில் நிகழ்ச்சிகளையும் காட்டலாம். இவ்வாறு தாமாகவே நமது இணையதளத்தைப் பார்ப்பதற்கான ஆர்வத் துடிப்பு மக்களுக்குள் ஏற்பட்டு விடும். இவ்வாறே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கண்ணியத்திற்குரிய கலீஃபாக்களின் நூல்களை அறிமுகப்படுத்தவும் வேண்டும். இவ்வாறு மக்களிடம் அவற்றை வாசிப்பதற்கான ஆர்வம் ஏற்படும்.

**முக்கிய குறிப்பு:** ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா சார்பாக 200 பைஅத்துகள் செய்ய வைப்பதற்கான இலக்கை நிர்ணயித்துள்ளார்கள். இந்த இலக்கை எட்டுவதற்கு மஜ்லிஸ்கள் முழுமுயற்சி மேற்கொள்ள வேண்டும். மேலும், இறைவன்பால் அழைப்பவர்களை நல்ல முறையில் துரிதப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

## இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் மஜ்லிஸ் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் 2024 ஆம் ஆண்டிற்கான ஆண்டு இஜ்திமாவின் நிகழ்ச்சிகள் விவரம்

அன்பிற்குரிய ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் கடந்த ஆண்டு (2023) இஜ்திமாவுக்காக SHUHADA-E-AHMADIYYAT - **அஹ்மதிய்யத்தின் உயிர்த்தியாகிகள்'** என்ற Theme ஐ (மையக் கருவைத்) தேர்வு செய்தார்கள். அனைத்து மஜ்லிஸ்களிலும் நடைபெறவுள்ள இஜ்திமாக்களை இதற்கு ஏற்பவே நடத்தவும். இஜ்திமாக்களில் இந்த Theme க்கு ஏற்பவே சிறப்பு நிகழ்ச்சி அல்லது சொற்பொழிவுகள் ஆற்றுவதற்கான நிகழ்ச்சியை அமைக்கவும்.

**ஆண்டு இஜ்திமாவில் பங்கு பெறுவதற்கான தகுதி:**

1) நடப்பு ஆண்டில் உள்ளூர் இஜ்திமா நடத்தப்பட்ட மஜ்லிஸைச் சார்ந்த குத்தாம் மற்றும் அத்ஃபாலுக்கு மட்டுமே தலைமையக ஆண்டு இஜ்திமாவின் போட்டிகளில் பங்கு பெறுவதற்கான அனுமதி வழங்கப்படும் என்பதை அனைத்து காயித்மார்களும் குறிப்பாக கவனத்திற் கொள்ளவும்.

2) ஒவ்வொரு மாவட்ட/ மாநில அளவில் நடைபெறும் இஜ்திமாக்களின் மார்க்க அறிவுப் போட்டிகளில் முதல் இடத்தை வகிக்கின்ற ஒரு காதிம் அல்லது திஃப்லுக்கு மட்டுமே தலைமையக ஆண்டு இஜ்திமாவின் போட்டிகளில் பங்கு பெறுவதற்கான அனுமதி வழங்கப்படும்.

3) மார்க்க அறிவுப் போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறவிருக்கின்ற குத்தாம் மற்றும் அத்ஃபாலின் பெயர்ப்பட்டியல் மற்றும் அணிகளின் பெயர்கள் உள்ளூர்/ மாவட்ட காயித் தரப்பிலிருந்து இஜ்திமாவிற்கு முன்பு அலுவலகத்திற்கு அஞ்சல் வழியாக அல்லது Mail மூலமாகக் கிடைக்கப் பெறுவது அவசியம். இஜ்திமாவின் நிகழ்ச்சிகளின் விவரம் கீழ்வருமாறு:-

**சிறப்பாகப் பணியாற்றிய உள்ளூர், மாவட்ட மற்றும் மாநில மஜ்லிஸுகள்/ காயிதுகள்:** இதற்காக இந்தியாவின் அனைத்து உள்ளூர், மாவட்ட மற்றும் மாநில குத்தாம் அத்ஃபால் மஜ்லிஸுகளுக்கு மத்தியில் பணிகள் ரீதியாக ஒப்பீடு நடைபெறும். ஆண்டு முழுவதுமான செயல்பாடுகளுக்கு ஏற்ப உள்ளூர் மஜ்லிஸுகளில் முதல் 10 இடங்களைப் பெறுகின்ற மஜ்லிஸுளுக்கு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அருள்குரிய கையொப்பம் இடப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும். அவ்வாறே மாவட்ட மஜ்லிஸுகளில் முதல் 5 இடங்களைப் பெறுகின்ற மஜ்லிஸுளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். ஒப்பீடு செய்து பார்க்கும் போது கருத்திற் கொள்ளப்படும் அந்த அனைத்து விஷயங்களும் லாயிஹா அமலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**முக்கிய வழிகாட்டல்கள்:** மாவட்ட/ உள்ளூர் காயித்மார்கள் அனைவரும் தங்களுடைய உள்ளூர்/ மாவட்ட இஜ்திமாக்களை இந்த நிகழ்ச்சிகளுக்கு ஏற்பவே நடத்த வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறார்கள்.

## (குத்தாம் - மார்க்க அறிவுப் போட்டிகள்)

குத்தாமின் மார்க்க அறிவுப் போட்டிகளுக்கான பிரிவுகள், கீழ் கொடுக்கப்பட்டுள்ள முறைப்படி இருக்கும்.

பிரிவு I : இந்தப் பிரிவில் முபல்லிஃக், முஅல்லிம் அல்லது ஹாஃபிழ் ஆக இருக்கக்கூடிய அல்லது காதியான் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கல்வி பயின்று கொண்டிருக்கக்கூடிய காதிம்கள் அடங்குவர்.

பிரிவு II : இந்தப் பிரிவில் மற்ற அனைத்து காதிம்களும் அடங்குவர்.

**அழகிய முறையில் கிராஅத் ஓதும் போட்டி:** (நேரம் 2 நிமிடம், இரு பிரிவினருக்கும் தனித்தனியாகப் போட்டி நடைபெறும்) திருக்குர்ஆனை மனனமாக ஓத வேண்டும். எந்த காதிம் திருக்குர்ஆனை மனனமாக ஓதமாட்டாரோ அவர் போட்டியில் பங்குபெற தகுதியுடைவர் ஆகமாட்டார் என்பது தேர்வு செய்யும் போது கருத்திற் கொள்ளப்படும்.

பிரிவு I மற்றும் II (இரு பிரிவிற்கும் தனித்தனியாகப் போட்டி நடக்கும்): **'சூரா அல் கஹ்ஃப் மற்றும் சூரா அல் ஜுமுஆ'**

**நஸ்ம் போட்டி:** (நேரம் 2 நிமிடம்) இந்தப் போட்டி இரு பிரிவிற்கும் ஒன்றாக நடைபெறும். ஹஸ்ரத் வாக்களிக்ப்பட்ட மஸிஹ் (அலை) அவர்கள், கண்ணியத்திற்குரிய கலீஃபாக்கள் மற்றும் பிரசித்தி பெற்ற அஹ்மதி கவிஞர்களின் கவிதைகளிலிருந்து நஸ்ம் பாடலாம்.

**பேச்சு போட்டி :** (நேரம் 3 நிமிடம்) பிரிவு I மற்றும் II க்குத் தனித்தனியாகப் போட்டி நடைபெறும்.

**தலைப்புகள் :-**

i) அஹ்மதிய்யத்தின் உயிர்த்தியாகிகள் (SHUHADA-E-AHMADIYYAT)
ii) ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு
iii) ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு
iv) இமாமுக்குக் கட்டுப்படுதல்
v) இளைஞர்கள் சீர்திருந்தாத வரை சமுதாயங்கள் சீர்திருந்த முடியாது

**வினாடி வினா போட்டி (QUIZ):**

(i) நூல் : இரண்டு உயிர்த்தியாகிகள்
(ii) நூல் : அஹ்மதிய்யத் யஃனீ ஹக்கீக்கீ இஸ்லாம்
(iii) நூல் : செயல் சீர்திருத்தம்
(iv) பொது அறிவு 2023 - 24
(v) ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நவம்பர் 2023 முதல் செப்டம்பர் 2024 வரை ஆற்றிய ஜுமுஆ பேருரைகள்.

***நினைவுத்திறன் போட்டி (Memory Test) *தூது கடத்தும் போட்டி (Message Passing) *அறிவுத்திறன் தேர்வு போட்டி (IQ Exam) *பீத் பாஸீ போட்டி (ஜமாஅத் கவிதை அந்தாதிப் போட்டி - ஒற்றையர்)**

## (குத்தாம் - விளையாட்டுப் போட்டிகள்)

***கால்பந்து (Football) *கைப்பந்து (Volley ball) *மராத்தான் (Marathon)**
***தேசிய கபடி (National Kabaddi) *கயிறு இழுத்தல் (Tug of War)**
***இசைநாற்காலி (Musical Chair) *பூப்பந்தாட்டம் - ஒற்றையர் (Badminton Singles)**
***100 மீட்டர் ஓட்டப்பந்தயம் (100 Meter Running Race)**
***நீளம் தாண்டுதல் (Long Jump)**

**குறிப்பு:** ஆண்டு இஜ்திமாவின் போது இவ்வருடமும் வழக்கம் போல் March past நடத்தப்படலாம். இதற்காக மஜ்லிஸுகள் ஆயத்தமாகி வரவும். இதில் தங்கள் மஜ்லிஸ் சார்பாகக் கலந்து கொள்ளும் காதிம்களிடம் முழுமையான kit இருக்க வேண்டும் என்பதை மஜ்லிஸுகள் கடைபிடிக்க வேண்டும். இந்த நிகழ்ச்சியை வெற்றிகரமானதாக ஆக்குவதற்காகவும் தற்போதிலிருந்தே மஜ்லிஸுகள் ஆயத்தம் மேற்கொள்ளவும்.

விளையாட்டுப் போட்டிகளுக்காக (Team events) அணிவாரியான போட்டிகளில் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஓர் அணி கலந்து கொள்ளும். காதியான் தலைமையகம் என்ற அந்தஸ்த்தில் இருப்பதால் காதியானுக்கு ஒரு தனி அணி இருக்கும். முபல்லிஃக்மார்கள்/ முஅல்லிம்மார்கள் தாம் பணியமர்த்தப்பட்டுள்ள அந்த மாநிலத்திற்குப் பிரதிநிதிகளாக இருப்பார்கள். பஞ்சாப் கோட்டாவில் காதியானைச் சேர்ந்த குத்தாம் கலந்து கொள்ள முடியாது. அஹ்மதி குத்தாம் மற்றும் அத்ஃபாலுக்கு மட்டுமே இஜ்திமாவின் மார்க்க அறிவுப் போட்டியிலும் விளையாட்டுப் போட்டியிலும் பங்குபெற அனுமதியுண்டு.

## (அத்ஃபால் - மார்க்க அறிவுப் போட்டிகள்)

அத்ஃபாலுக்கான பிரிவுகள் கீழ்வருமாறு இருக்கும்:

**பிரிவு I:** 13 வயது முதல் 15 வயது வரை உள்ள அத்ஃபால்

**பிரிவு II:** 10 வயது முதல் 12 வயது வரை உள்ள அத்ஃபால்

**பிரிவு III:** 7 வயது முதல் 9 வயது வரை உள்ள அத்ஃபால்

ஹாஃபிஸ் (திருக்குர்ஆனை முழுமையாக மனனம் செய்த) அத்ஃபால் அனைவரும் அழகிய கிரஅத் போட்டியில் பிரிவு I இல் கலந்து கொள்வர்.

**அழகிய முறையில் கிராஅத் ஓதும் போட்டி:** (நேரம் 1.30 நிமிடம்) (மூன்று பிரிவினருக்கும் தனித்தனியாகப் போட்டி நடைபெறும்)

**பிரிவு I மற்றும் II க்கு** ‘சூரா அல் பகராவின் கடைசி மூன்று வசனங்கள்’ நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

**பிரிவு III:** எந்த சூராவை வேண்டுமானாலும் ஓதலாம்.

**நஸ்ம் போட்டி:** (நேரம் 1.30 நிமிடம்) இந்தப் போட்டி பிரிவு I மற்றும் II க்கு ஒன்றாக நடைபெறும். பிரிவு III க்குத் தனியாகப் போட்டி நடைபெறும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், கண்ணியத்திற்குரிய கலீஃபாக்கள் மற்றும் பிரசித்தி பெற்ற அஹ்மதி கவிஞர்களின் கவிதைகளிலிருந்து நஸ்ம் பாடலாம்.

**பேச்சு போட்டி:** (நேரம் 3 நிமிடம்) மூன்று பிரிவுக்கும் தனித்தனியாகப் போட்டி நடைபெறும்) **பிரிவு I மற்றும் II க்கான தலைப்புகள் :-**

**(i)** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கங்கள்.

**(ii)** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மேல் கொண்டிருந்த அளவற்ற நேசம்.

**(iii)** கிலாஃபத்தின் முக்கியத்துவமும் அதன் அருள்களும்.

**(iv)** தொழுகையின் முக்கியத்துவம்

**(v)** திருக்குர்ஆன் ஓதும் போது பேண வேண்டிய ஒழுங்குமுறைகள்

**பிரிவு III க்கான தலைப்புகள் :-**

**(i)** ஜமாஅத்தான தொழுகையின் முக்கியத்துவம்.

**(ii)** துஆவின் அருள்கள்.

**(vi)** பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல்.

**(vii)** உண்மை.

**(viii)** பள்ளிவாசலில் பேண வேண்டிய ஒழுங்குமுறைகள்.

**வினாடி வினா போட்டி (QUIZ):**

**(i)** நூல் **'**தீனீ மஃலூமாத்**'** (முழுவதுமாக). **(ii)** பொது அறிவு: **2023 - 24** ஆம் ஆண்டு பொது அறிவுக் கேள்விகள். **(iii)** **'**காமியாபீ கி ராஹேு(ன்)**'** என்ற நூலில் (கமர் அத்ஃபால் பகுதி முழுவதுமாக)

**கஸீதா மனனப்போட்டி:** முழுவதுமாக **70** கஸீதா மனனமாக ஒப்பிக்கும் அத்ஃபாலுக்கு முதல் பரிசு வழங்கப்படும். ஆயினும், பிரிவு **III** - இல் **35** கஸீதா மனனமாக ஒப்பிக்கும் அத்ஃபாலுக்கு முதல் பரிசு வழங்கப்படும்.

**திருக்குர்ஆன் மனனப்போட்டி:**

பிரிவு **I** மற்றும் **II** க்கான பாடத்திட்டம்: சூரா அல் பகராவின் முதல் **17** வசனங்கள் மற்றும் திருக்குர்ஆனின் கடைசி **15** சூராக்கள் .

பிரிவு **III** க்கான பாடத்திட்டம்: திருக்குர்ஆனின் கடைசி **10** சூராக்கள்.

*** பீத் பாஸீ போட்டி (ஜமாஅத் கவிதை அந்தாதிப் போட்டி - குழுவாக)**

***பிரிவு I மற்றும் II க்கு கிலாஃபத் உறுதிமொழி மனனப் போட்டி**

***பிரிவு III க்கு அத்ஃபால் உறுதிமொழி மனனப் போட்டி**

***எவராவது ஒரு திஃப்ல் 30 ஆவது பாகத்தை முழுவதுமாக மனனம் செய்(து ஒப்பித்)தால் அவருக்கு சிறப்புப் பரிசு வழங்கப்படும்.**

## (அத்ஃபால் - விளையாட்டுப் போட்டிகள்)

***கால்பந்து (Football) *100 மீட்டர் ஓட்டப்பந்தயம் (100 Meter Running Race) *பூப்பந்தாட்டம் - ஒற்றையர் (Badminton Singles) *தேசிய கபடி (National Kabaddi) *குறிபார்த்து எறிதல் (Dart Throw)**

இவை போக, பிரிவு **'III'** க்கான சுவாரஸ்யமான விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறும்.

❀❀❀

# 2023 - 24 ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான ஆண்டு இஜ்திமாக்களின் நிகழ்ச்சி விவரம்

மேற்கூறப்பட்டுள்ள நிகழ்ச்சி படி, இந்தியாவின் எல்லா மஜ்லிஸுகளிலும் (உள்ளூர் அளவில்) ஆண்டு இஜ்திமாக்களை நடத்த முயற்சி செய்யவும். ஆண்டு இஜ்திமா நடத்துவது தொடர்பாக அனைத்துத் திட்டங்களையும் வகுத்து தேதிகளை நிர்ணயித்து ஆண்டின் துவக்கத்திலேயே இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா அலுவலகத்திலிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ளவும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரப்படி (தங்களுக்கு) நிர்ணயிக்கப்பட்டுள்ள மாதங்களில் மாவட்ட இஜ்திமாக்களை நடத்துவது அவசியமாகும். மாவட்ட காயித்மார்கள் இதற்கு ஏற்ப ஆண்டின் துவக்கத்திலிருந்தே திட்டம் வகுத்து ஆயத்தம் மேற்கொள்ள ஆரம்பிக்கவும்.

**தமிழ்நாட்டின் நான்கு மாவட்டங்களுக்கும்**
**“மே மாதம்”**
**நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

**மாவட்டங்கள் விவரம்:**

**1. திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமாரி மாவட்டம்.**
**2. மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டம்.**
**3 கோவை மாவட்டம்.**
**4. சென்னை மாவட்டம்.**

**மொழிபெயர்ப்பாளர் குறிப்பு:** மூல நூலில் இந்தியாவின் எந்தெந்த மாவட்டங்கள் எந்தெந்த மாதங்களில் மாவட்ட இஜ்திமாக்களை நடத்த வேண்டும் என்ற விவரம் பதியப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் நான்கு மாவட்டங்களுக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள மாதத்தின் விவரம் மட்டுமே மொழியாக்கத்தில் தரப்பட்டுள்ளது.

# 2023-24 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் (Yearly Calendar)

## நவம்பர் 2023

- 5 ஆம் தேதி - மாதாந்திர பணிகள் அறிக்கை அனுப்ப வேண்டும். (குத்தாம்/அத்ஃபால்)
- 5 ஆம் தேதி - ஜமாஅத்தான தஹஜ்ஜுத் தொழுகை மற்றும் வகாரே அமல் (குத்தாம்/அத்ஃபால்)
- ஒவ்வொரு வாரமும் தப்லீஃக் தினம் கொண்டாடப்பட வேண்டும்.
- 3 - 9 ஆம் தேதி - முதல் 'மால் வாரம்' (பட்ஜெட் வடிவமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளவும்).
- 25 ஆம் தேதி - செயற்குழு கூட்டம் (இதில் நடப்பு மாதத்தின் அறிக்கையைத் தயார் செய்யவும். அடுத்த மாதத்திற்கான திட்டம் வகுக்கவும்.) தஹ்ரீகே ஜதீத் பொருள் தியாகத்தில் இணைந்துள்ள குத்தாமின் பெயர்ப்பட்டியல்.
- ஜமாஅத் அமைப்புடன் கலந்தாலோசித்து தர்பிய்யத் கூட்டம் நடத்தவும். தர்பிய்யத் கூட்டத்தில் எல்லா குத்தாமும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு துஆவிற்காகக் கடிதம் எழுதவும். மஜ்லிஸுடைய காயித் சாஹிப் அந்தக் கடிதங்களை அனுப்புவதற்கான ஏற்பாடு செய்யவும்.

  தர்பிய்யத் கூட்டத்திற்கான தலைப்பு:

  **"அறிவியல் ரீதியாக இறையிருப்பிற்கான சான்றுகள்"**
- மஜ்லிஸுடைய காயிதும் செயற்குழு உறுப்பினர்களும் லாயிஹா அமலை (செயல் திட்டத்தைப்) படிக்கவும். Refresher Class (புத்தாக்க வகுப்பு)க்கான ஏற்பாடு செய்யவும்.
- இந்த மாதம் குறைந்தபட்சம் 5 தினங்கள் தஃலீம் வகுப்புகள் (மார்க்கக் கல்வி வகுப்புகள்) நடத்தவும்.
- நூல் வாசித்தல்: 'அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 113 - 134

# டிசம்பர் 2023

- **3 ஆம் தேதி - ஜமாஅத்தான தஹஜ்ஜுத் தொழுகை மற்றும் வாகரே அமல் (குத்தாம்/அத்ஃபால்)**
- **5 ஆம் தேதி - மாதாந்திர பணிகள் அறிக்கை அனுப்ப வேண்டும். (குத்தாம்/அத்ஃபால்)**
- **10 ஆம் தேதி - செயற்குழு கூட்டம் (இதில் நடப்பு மாதத்தின் அறிக்கையைத் தயார் செய்யவும். அடுத்த மாதத்திற்கான திட்டம் வகுக்கவும்.) மேலும், காதியான் ஆண்டு மாநாட்டில் காதிம்களைக் கலந்து கொள்ளச் செய்வதற்கான திட்டம் வகுக்கவும்.**
- **31 ஆம் தேதி - தஜ்னீத் மற்றும் பட்ஜெட் படிவத்தை நிரப்பி தலைமயகத்திற்கு அனுப்பி வைக்கவும் (குத்தாம் மற்றும் அத்ஃபால்). பட்ஜெட் 25% அதிகரித்திருக்க வேண்டும்.**
- **ஜமாஅத் அமைப்புடன் கலந்தாலோசித்து தர்பிய்யத் கூட்டம் நடத்தவும். தர்பிய்யத் கூட்டத்தில் எல்லா குத்தாமும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு துஆவிற்காகக் கடிதம் எழுதவும். மஜ்லிஸுடைய காயித் சாஹிப் அந்தக் கடிதங்களை அனுப்புவதற்கான ஏற்பாடு செய்யவும்.**

**தர்பிய்யத் கூட்டதிற்கான தலைப்பு:**

**"காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதன் முக்கியத்துவமும் அதன் அருள்களும்"**

- **இந்த மாதம் குறைந்தபட்சம் 5 தினங்கள் தஃலீம் வகுப்புகள் (மார்க்கக் கல்வி வகுப்புகள்) நடத்தவும்.**
- **நூல் வாசித்தல்: அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 134 - 154**
- **ஒவ்வொரு வாரமும் தப்லீஃக் தினம் கொண்டாடப்பட வேண்டும்.**

# ஜனவரி 2024

- 1 ஆம் தேதி - ஜமாஅத்தான தஹஜ்ஜுத் தொழுகை மற்றும் வகாரே அமல் (குத்தாம் மற்றும் அத்ஃபால்)
- 5 ஆம் தேதி - மாதாந்திர பணிகள் அறிக்கை அனுப்ப வேண்டும். (குத்தாம்/அத்ஃபால்)
- 5 முதல் 11 ஆம் தேதி - முதல் தப்லீஃக் வாரம் (இந்த வாரத்தில் ஒரு கேள்வி பதில் நிகழ்ச்சி நடத்த வேண்டும். புக் ஸ்டால் அமைக்க வேண்டும். தப்லீஃக் வகுப்புகள் நடத்த வேண்டும்.
- 21 ஆம் தேதி - செயற்குழு கூட்டம் (அறிக்கை தயார் செய்தல்/ திட்டம் வகுத்தல்) (குத்தாம் மற்றும் அத்ஃபால்)
- குத்தாமுக்கு வக்ஃபேஆர்ஸீ செய்ய வலியுறுத்தவும். ஒருங்கமைக்கப்பட்ட திட்டத்துடன் குத்தாமை வக்பே ஆர்ஸீக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யவும்.
- ஜமாஅத் அமைப்புடன் கலந்தாலோசித்து தர்பிய்யத் கூட்டம் நடத்தவும். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு துஆவிற்காகக் கடிதம்.

தர்பிய்யத் கூட்டதிற்கான தலைப்பு:

**அஹ்மதிய்யத்தின் உயிர்த்தியாகிகள்**

- இந்த மாதம் குறைந்தபட்சம் 5 தினங்கள் தஃலீம் வகுப்புகள் (மார்க்கக் கல்வி வகுப்புகள்) நடத்தவும்.
- நூல் வாசித்தல்: அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 154 - 174
- 'அத்ஃபால் நன்னே முஜாஹிதீன் வக்ஃபே ஜதீத்' (வக்ஃபே ஜதீதின் சின்னஞ்சிறு போராளிகளான அத்ஃபால்) பெயர்ப்பட்டியலைத் தயாரித்துத் தலைமையகத்திற்கு அனுப்பவும்.
- 28 ஆம் தேதி - தீனீ நிஸாப் (மார்க்கத்) தேர்வு (அனைத்து குத்தாம் மற்றும் அத்ஃபால் அவசியம் கலந்து கொள்ள வேண்டும்/ தலைமயகத்திலிருந்து வினாத்தாள்கள் அனுப்பி வைக்கப்படும்)
- முதல் கருத்தரங்கு (Seminar) 14 ஆம் தேதி: தலைப்பு

**'போதை பொருள்களால் மனித வாழ்விலும்**
**சமூகத்திலும் ஏற்படும் பாதிப்புகள்'**

- ஆடிட் ரிப்போர்ட் (தணிக்கை அறிக்கையைத்) தயார் செய்து தலைமயகத்திற்கு அனுப்பி வைக்கவும்.
- ஒவ்வொரு வாரமும் தப்லீஃக் தினம் கொண்டாடப்பட வேண்டும்.

# ஃபிப்ரவரி 2024

- **4** ஆம் தேதி - ஜமாஅத்தான தஹஜ்ஜுத் தொழுகை மற்றும் வகாரே அமல் (குத்தாம் மற்றும் அத்ஃபால்)
- **4** ஆம் தேதி - மாதாந்திர பணிகள் அறிக்கை அனுப்ப வேண்டும். (குத்தாம்/அத்ஃபால்)
- 18 ஆம் தேதி - **'மத்தன் பேஷ்கோயீ முஸ்லிஹ் மவ்வூத் (ரலி)'** (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் குறித்த முன்னறிவிப்பின் இறையறிவிப்புச் சொற்களை) மனனம் செய்யும் போட்டி நடத்தவும்.
- **25** ஆம் தேதி - செயற்குழு கூட்டம் (இதில் நடப்பு மாதத்தின் அறிக்கையை தயார் செய்யவும். அடுத்த மாதத்திற்கான திட்டம் வகுக்கவும்.) (குத்தாம்/அத்ஃபால்)
- ஜமாஅத் அமைப்புடன் கலந்தாலோசித்து தர்பிய்யத் கூட்டம் நடத்தவும். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு துஆவிற்காகக் கடிதம் எழுதுதல்.

தர்பிய்யத் கூட்டதிற்கான தலைப்பு:

**இளைஞர்கள் சீர்திருந்தாத வரை**

**சமுதாயங்கள் சீர்திருந்த முடியாது**

- இந்த மாதம் குறைந்தபட்சம் 5 தினங்கள் தஃலீம் வகுப்புகள் (மார்க்கக் கல்வி வகுப்புகள்) நடத்தவும்.
- நூல் வாசித்தல்: அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 174 - 193
- ஒவ்வொரு வாரமும் தப்லீஃக் தினம் கொண்டாடப்பட வேண்டும்.

# மார்ச் 2024

- **5** ஆம் தேதி - மாதாந்திர பணிகள் அறிக்கை அனுப்ப வேண்டும். (குத்தாம்/அத்ஃபால்)
- **3** ஆம் தேதி - ஜமாஅத்தான தஹஜ்ஜுத் தொழுகை
- **6** ஆம் தேதி - முன்னுதாரணமான (சிறப்பு) வகாரே அமல்
- **1 - 7** ஆம் தேதி - மரம்நடும் வாரம்
- **17** ஆம் தேதி - ரத்ததான முகாம் நடத்த வேண்டும்.
- **26** ஆம் தேதி - **'ஹுஸ்னே பயான்'** (அழகிய முறையில் சொற்பொழிவு ஆற்றும்) போட்டி நடத்தவும்.
- **26** ஆம் தேதி - செயற்குழு கூட்டம் (அறிக்கை தயார் செய்தல்/ திட்டம் வகுத்தல்) (குத்தாம் மற்றும் அத்ஃபால்)
- ஜமாஅத் அமைப்புடன் கலந்தாலோசித்து தர்பிய்யத் கூட்டம் நடத்தவும். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு துஆவிற்காகக் கடிதம் எழுதுதல்.

தர்பிய்யத் கூட்டதிற்கான தலைப்பு:

**'ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தப்லீஃக் செய்யும் முறை'**

- இந்த மாதம் குறைந்தபட்சம் **5** தினங்கள் தஃலீம் வகுப்புகள் (மார்க்கக் கல்வி வகுப்புகள்) நடத்தவும்.
- நூல் வாசித்தல்: அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் **193 - 213**
- ஒவ்வொரு வாரமும் தப்லீஃக் தினம் கொண்டாடப்பட வேண்டும்.
- **19** ஆம் தேதி - அனைத்து குத்தாம் மற்றும் அத்ஃபாலுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் இரத்த பிரிவு பரிசோதனை நடத்தவும். **'ஜல்ஸா ஹிஃப்ஸானே ஸிஹத்'** (உடல் ஆரோக்கியம் குறித்த கூட்டம்) நடத்தவும்.
- **17** ஆம் தேதி - இரண்டாவது கருத்தரங்கு (**Seminar**) நடத்தவும். தலைப்பு:

**'இஸ்லாம் அஹ்மதிய்யத் மீது தற்காலத்தில் செய்யப்படும் ஆட்சேபனைகளும் அவற்றிற்கான பதில்களும்'**

# ஏப்ரல் 2024

- 7 ஆம் தேதி - ஜமாஅத்தான தஹஜ்ஜுத் தொழுகை மற்றும் வகாரே அமல்.
- 1 - 7 ஆம் தேதி - அத்ஃபால் வாரம் நடத்தவும்.
- 5 ஆம் தேதி - மாதாந்திர பணிகள் அறிக்கை அனுப்ப வேண்டும். (குத்தாம்/அத்ஃபால்)
- 23 ஆம் தேதி - பெற்றோர்கள் தினம் கொண்டாடவும். Book Bank (புத்தக வங்கி) நிறுவவும். அதில் குத்தாம் மற்றும் அத்ஃபால் கலந்து கொள்ள வலியுறுத்தவும்.
- 24 ஆம் தேதி - செயற்குழு கூட்டம். (இதில் நடப்பு மாதத்தின் அறிக்கையைத் தயார் செய்யவும். அடுத்த மாதத்திற்கான திட்டம் வகுக்கவும்.) (குத்தாம் மற்றும் அத்ஃபால்)
- ஜமாஅத் அமைப்புடன் கலந்தாலோசித்து தர்பிய்யத் கூட்டம் நடத்தவும். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு துஆவிற்காகக் கடிதம் எழுதுதல்.

தர்பிய்யத் கூட்டதிற்கான தலைப்பு:

**'பொருள் தியாகத்தின் முக்கியத்துவமும்**
**குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பொறுப்புகளும்'**

- இந்த மாதம் குறைந்தபட்சம் 5 தினங்கள் தஃலீம் வகுப்புகள் (மார்க்கக் கல்வி வகுப்புகள்) நடத்தவும்.
- 28 ஆம் தேதி - இரண்டாவது தீனீ நிஸாப் (மார்க்கத்) தேர்வு
- நூல் வாசித்தல்: அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 213 - 233
- தலைமையகத்திற்கு (ஆடிட் ரிப்போர்ட்) தணிக்கை அறிக்கை அனுப்பவும்.
- ஒவ்வொரு வாரமும் தப்லீஃக் தினம் கொண்டாடப்பட வேண்டும்.

# மே 2024

- **5 - 11** ஆம் தேதி - இரண்டாவது 'மால் வாரம்'
- **7** ஆம் தேதி - ஜமாஅத்தான தஹஜ்ஜுத் தொழுகை மற்றும் வகாரே அமல்.
- **5** ஆம் தேதி - மாதாந்திர பணிகள் அறிக்கை அனுப்ப வேண்டும். (குத்தாம்/அத்ஃபால்)
- **5 - 19** ஆம் தேதி - பதினைந்து நாள் தர்பிய்யத் வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.
- **26** ஆம் தேதி - குலூ ஜமீஆ (அனைவரும் உணவுப் பொருள்கள் கொண்டு வந்து அவற்றைப் பகிர்ந்து ஒன்றாக அமர்ந்து உண்ணும் நிகழ்ச்சி) மற்றும் சுற்றுலா (Picnic) (குத்தாம் மற்றும் அத்ஃபால்)
- **26** ஆம் தேதி - செயற்குழு கூட்டம். (இதில் நடப்பு மாதத்தின் அறிக்கையைத் தயார் செய்யவும். அடுத்த மாதத்திற்கான திட்டம் வகுக்கவும்.) (குத்தாம் மற்றும் அத்ஃபால்)
- ஜமாஅத் அமைப்புடன் கலந்தாலோசித்து தர்பிய்யத் கூட்டம் நடத்தவும். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு துஆவிற்காகக் கடிதம் எழுதுதல்.

தர்பிய்யத் கூட்டதிற்கான தலைப்பு:

**'கிலாஃபத்தின் உறுதிப்பாடும்<br>குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பொறுப்புகளும்'**

- நூல் வாசித்தல்: அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் **233 - 253**
- ஒவ்வொரு வாரமும் தப்லீஃக் தினம் கொண்டாடப்பட வேண்டும்.
- மூன்றாவது கருத்தரங்கு (Seminar) **19** ஆம் தேதி: தலைப்பு

**'திருமண பந்தம் தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்)**

**அவர்களின் வழிகாட்டல்கள்'**

# ஜூன் 2024

- **7 - 13 ஆம் தேதி - மூன்றாவது 'மால் வாரம்'**
- **2 ஆம் தேதி - ஜமாஅத்தான தஹஜ்ஜுத் தொழுகை மற்றும் வகாரே அமல்.**
- **5 ஆம் தேதி - மாதாந்திர பணிகள் அறிக்கை அனுப்ப வேண்டும். (குத்தாம்/அத்ஃபால்)**
- **25 ஆம் தேதி - செயற்குழு கூட்டம். (இதில் நடப்பு மாதத்தின் அறிக்கையைத் தயார் செய்யவும். அடுத்த மாதத்திற்கான திட்டம் வகுக்கவும்.) (குத்தாம் மற்றும் அத்ஃபால்)**
- **ஜமாஅத் அமைப்புடன் கலந்தாலோசித்து தர்பிய்யத் கூட்டம் நடத்தவும். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு துஆவிற்காகக் கடிதம் எழுதுதல்.**

**தர்பிய்யத் கூட்டதிற்கான தலைப்பு:**

**'வஸிய்யத் அமைப்பின் வரலாறும்<br>தற்காலத்தில் அதன் அவசியமும்'**

- **நூல் வாசித்தல்: அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 253 - 273**
- **ஒவ்வொரு வாரமும் தப்லீஃக் தினம் கொண்டாடப்பட வேண்டும்.**

# ஜூலை 2024

- 7 ஆம் தேதி - ஜமாஅத்தான தஹஜ்ஜுத் தொழுகை மற்றும் வகாரே அமல்.
- 5 ஆம் தேதி - மாதாந்திர பணிகள் அறிக்கை அனுப்ப வேண்டும். (குத்தாம்/அத்ஃபால்)
- 7 - 14 ஆம் தேதி - நப் முபாயிஈனுக்கான (புதிதாக பைஅத் செய்தவர்களுக்கான) தர்பிய்யத் வகுப்புகள்.
- 24 ஆம் தேதி - செயற்குழு கூட்டம். (அறிக்கை தயார் செய்தல்/ திட்டம் வகுத்தல்) (குத்தாம் மற்றும் அத்ஃபால்)
- ஜமாஅத் அமைப்புடன் கலந்தாலோசித்து தர்பிய்யத் கூட்டம் நடத்தவும். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு துஆ கடிதம் எழுதுதல்.

தர்பிய்யத் கூட்டதிற்கான தலைப்பு:

**'தற்காலத்தில் வக்ஃபேநவ் / வக்ஃபே ஸிந்தகீயின் முக்கியத்துவமும் அதன் அருள்களும்'**

- இந்த மாதம் குறைந்தபட்சம் 5 தினங்கள் தஃலீம் வகுப்புகள் (மார்க்கக் கல்வி வகுப்புகள்) நடத்தவும்
- தலைமையகத்திற்கு (ஆடிட் ரிப்போர்ட்) தணிக்கை அறிக்கை அனுப்பவும்.
- குத்தாம் மற்றும் அத்ஃபாலின் ஆண்டறிக்கையைத் தலைமையகத்திற்கு அனுப்பவும்.
- நூல் வாசித்தல்: அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 273 - 293
- ஒவ்வொரு வாரமும் தப்லீஃக் தினம் கொண்டாடப்பட வேண்டும்.

# ஆகஸ்ட் 2024

- **4** ஆம் தேதி - ஜமாஅத்தான தஹஜ்ஜுத் தொழுகை மற்றும் வகாரே அமல்.
- **5** ஆம் தேதி - மாதாந்திர பணிகள் அறிக்கை அனுப்ப வேண்டும். (குத்தாம்/அத்ஃபால்)
- **11** ஆம் தேதி - **'ஜல்ஸா ஹிஃப்ஸானே ஸிஹத்'** (உடல் ஆரோக்கியம் குறித்த கூட்டம்).
- **18** ஆம் தேதி - பெற்றோர்கள் தினம் கொண்டாடவும்.
- **27** ஆம் தேதி - செயற்குழு கூட்டம். (இதில் நடப்பு மாதத்தின் அறிக்கையைத் தயார் செய்யவும். அடுத்த மாதத்திற்கான திட்டம் வகுக்கவும்.) (குத்தாம் மற்றும் அத்ஃபால்)
- ஜமாஅத் அமைப்புடன் கலந்தாலோசித்து தர்பிய்யத் கூட்டம் நடத்தவும். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு துஆவிற்காகக் கடிதம் எழுதுதல்.

தர்பிய்யத் கூட்டதிற்கான தலைப்பு:

**'நாட்டுப் பற்று கொள்வது ஈமானின் அங்கமாகும்'**

- இந்த மாதம் குறைந்தபட்சம் 5 தினங்கள் தஃலீம் வகுப்புகள் (மார்க்கக் கல்வி வகுப்புகள்) நடத்தவும்
- நூல் வாசித்தல்: அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 293 - 313
- ஒவ்வொரு வாரமும் தப்லீஃக் தினம் கொண்டாடப்பட வேண்டும்.
- **25** ஆம் தேதி - மூன்றாவது தீனீ நிஸாப் (மார்க்கத்) தேர்வு.

# செப்டம்பர் 2024

- **5** ஆம் தேதி - மாதாந்திர பணிகள் அறிக்கை அனுப்ப வேண்டும். (குத்தாம்/அத்ஃபால்)
- **8** ஆம் தேதி - ஜமாஅத்தான தஹஜ்ஜுத் தொழுகை மற்றும் வகாரே அமல்.
- **5 - 11** ஆம் தேதி - இரண்டாவது தப்லீஃக் வாரம் (இந்த வாரத்தில்) கேள்வி பதில் மற்றும் தப்லீஃக் வகுப்புகள் நடத்தவும்.
- **15** ஆம் தேதி - குலூ ஜமீஆ (குத்தாம் மற்றும் அத்ஃபால்)
- **26** ஆம் தேதி - செயற்குழு கூட்டம். (இதில் நடப்பு மாதத்தின் அறிக்கையைத் தயார் செய்யவும். அடுத்த மாதத்திற்கான திட்டம் வகுக்கவும்.) (குத்தாம் மற்றும் அத்ஃபால்)
- ஜமாஅத் அமைப்புடன் கலந்தாலோசித்து தர்பிய்யத் கூட்டம் நடத்தவும். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு துஆவிற்காகக் கடிதம் எழுதுதல்.

தர்பிய்யத் கூட்டதிற்கான தலைப்பு:

**'திருக்குர்ஆன் அனைத்து அறிவுகளின் கருவூலமாகும்'**

- இந்த மாதம் குறைந்தபட்சம் 5 தினங்கள் தஃலீம் வகுப்புகள் (மார்க்கக் கல்வி வகுப்புகள்) நடத்தவும்
- நூல் வாசித்தல்: அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 314 - 335
- ஒவ்வொரு வாரமும் தப்லீஃக் தினம் கொண்டாடப்பட வேண்டும்.

# அக்டோபர் 2024

- **6** ஆம் தேதி - ஜமாஅத்தான தஹஜ்ஜுத் தொழுகை மற்றும் வகாரே அமல்.
- **5** ஆம் தேதி - மாதாந்திர பணிகள் அறிக்கை அனுப்ப வேண்டும். (குத்தாம்/அத்ஃபால்)
- **20** ஆம் தேதி - செயற்குழு கூட்டம். (இதில் நடப்பு மாதத்தின் அறிக்கையைத் தயார் செய்யவும். அடுத்த மாதத்திற்கான திட்டம் வகுக்கவும்.) (குத்தாம் மற்றும் அத்ஃபால்)
- ஜமாஅத் அமைப்புடன் கலந்தாலோசித்து தர்பிய்யத் கூட்டம் நடத்தவும். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு துஆவிற்காகக் கடிதம் எழுதுதல்.

தர்பிய்யத் கூட்டதிற்கான தலைப்பு:

**'இஸ்லாமிய போதனைகள்படி மனிதனின் உடல் நலத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம்'**

- தலைமையக ஆண்டு இஜ்திமாவில் கலந்து கொள்வதன் பால் குத்தாம் மற்றும் அத்ஃபாலுக்கு கவனமூட்டவும்.
- இந்த மாதம் குறைந்தபட்சம் 5 தினங்கள் தஃலீம் வகுப்புகள் (மார்க்கக் கல்வி வகுப்புகள்) நடத்தவும்
- நூல் வாசித்தல்: அஹ்மதிய்யத் யஃனீ ஹகீக்கீ இஸ்லாம் பக்கம் 335 - 351
- ஒவ்வொரு வாரமும் தப்லீஃக் தினம் கொண்டாடப்பட வேண்டும்.

**அல்லாஹ் அனைத்து குத்தாம் மற்றும் அத்ஃபாலுக்கு(த் திருக்குர்ஆனின் கட்டளையான) فَاسْتَبِقُوا الْخَيْرَاتِ 'நன்மையில் ஒருவரை ஒருவர் முந்திக் கொள்ளுங்கள்' எனும் உணர்வோடு இந்த 'ஆண்டு நிகழ்ச்சியில்' குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விஷயங்களையும் அமல்படுத்துவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! (ஆமீன்)**